வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
ஈழநாடு



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 03.05.2023 புதன்கிழமை | இதழ் : 145 | பக்கங்கள் : 16

## தமிழரசு கட்சியின் தலைமைக்கு மும்முனை போட்டி நிலவுகிறது!

### பகிரங்கப்படுத்தினார் கட்சித் தலைவர் மாவை




யாழ்ப்பாணம், மே 03

இலங்கை தமிழரசு கட்சியின் அடுத்த தலைவர் யார் என்ற விடயத்தில் மும்முனை போட்டி நிலவுகிறது என்று அந்தக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா கூறியுள்ளார்.

இணைய ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணலிலேயே இந்த விடயத்தை அவர் முதன்முறையாக பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்.

கட்சியின் பாரா 15

## வரணியில் விபத்து; இளைஞர் உயிரிழப்பு



தென்மராட்சி, மே 03

மோட்டார் சைக்கிளும் வானும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 15

## தமிழர் பிரச்னைக்கு சுயநிர்ணயமே தீர்வு



### 13ஆவது திருத்தம் தற்காலிக தீர்வே; ஜனாதிபதிக்கு விக்னேஸ்வரன் பதில்

கொழும்பு, மே 03

**தமிழ் மக்களின் பிரச்னைக்கு 13ஆவது திருத்தச் சட்டம் தீர்வாகாது. அது ஒரு தற்காலிக தீர்வே. எங்களின் பிரச்னைக்கு சுயநிர்ணய உரிமையே முறையான தீர்வு என்று தெரிவித்துள்ளார் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க. வி. விக்னேஸ்வரன்.**

ஐக்கிய தேசிய கட்சியின் மே தினக் கூட்டத்தில் மெய்நிகர் வழியே உரை யாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க, தமிழ் மக்களின் பிரச்னைக்கு இந்த ஆண்டுக்குள் தீர்வு வழங்கப்படும் என்று கூறினார். சுதந்திர தினத்துக்குள் தமிழர் பிரச்னைக்கு தீர்வு என்று அறிவித்த ஜனா திபதி, பிரச்னை தீர்வாக 13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல் படுத்தப்படும் என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில், நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களை சந்தித்த தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி யின் தலைவரான க. வி. விக்னேஸ்வரன் கூறுகையில்,

13ஆவது திருத்தச்சட்டம் எங்கள் பிரச்னைக்கு தீர்வாகாது. மாறாக எங்கள் உரிமை மீளக் கையளிக்கப்பட வேண் டும். 13ஆவது திருத்த சட்டம் ஒரு தற்கா லிக தீர்வே தவிர அதை வைத்து தமிழ் மக்களுக்கு தீர்வளிக்கப் 15

## ஏ. எல். விடைத்தாள் திருத்தும் பணி ஆரம்பமானது!

கொழும்பு, மே 03

உயர்தர பரீட்சையின் சில பாடங்களுக்கான விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்தது.

கிறிஸ்தவம், நடனமும் நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களுக்கான மதிப்பீட்டுப் பணிகள் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டதாக பரீட்சை 15

## குழந்தை மர்ம மரணம்!

யாழ்ப்பாணம், மே 03

பிறந்து ஒரு மாதமேயான குழந்தை ஒன்று மர்மமான முறையில் உயிரிழந்தது.

பொன்னாலையை சேர்ந்த விதுஜன் கிஷான் என்ற குழந்தையே நேற்று முன்தினம் இரவு இவ்வாறு உயிரிழந்தது.

மூக்கில் இருந்து இரத்தம் வடிந்ததையடுத்து பெற்றோர் உடனடியாக குழந்தையை மருத்துவ மனையில் சேர்த்தனர். பரிசோதித்த மருத்துவர்கள் குழந்தை ஏற்கனவே உயிரிழந்து விட்டதாகத் தெரிவித்தனர்.

குழந்தை உயிரிழந்த மைக்கான காரணம் தெரி 15

## தீர்வை பாராளுமன்றில் வையுங்கள்; பேச்சுக்கு நாம் பின்வாங்க மாட்டோம்!

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

மட்டக்களப்பு, மே 03

நாட்டின் நிலைக்கு இனப் பிரச்னைக்கு தீர்வு காணப்படாதமையே முதல் காரணம். இதை சிங்கள பேரினவாதக் கட்சிகளுக்கும் சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கூறி அவர்களையும் இணைத்து ஒரு தீர்வுத் திட்டத்தை பாராளுமன்றத்திலும் தமிழ் மக்களிடமும் முன்வைத்து விட்டு தமிழ்த் தரப்புகளுடன் பேசினால் நாங்கள் ஒருபோதும் பேச்சுக்கு பின்னடிக்கவோ, விலகி நிற்கவோ மாட்டோம்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் 15

## தையிட்டி மக்கள் இன்று போராட்டம்!

யாழ்ப்பாணம், மே 03

தையிட்டியில் மக்களின் காணி ஆக்கிரமிக்கப் பட்டு விகாரை அமைக்கப்பட்டமையை எதிர்த்தும் அயலிலுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தியும் மக்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இந்தப் போராட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தையிட்டி கலைவாணி 15

## தமிழர் தரப்பில் பழிபோட்டு ஜனாதிபதி தப்பிக்க முடியாது!

### சுமந்திரன் எம். பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மே 03

இனப்பிரச்னை தீர்வு விடயத்தில் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற தமிழர் தரப்பு தயாராக உள்ளது. எனவே, தமிழர் தரப்பில் பழியை போட்டு ஜனாதிபதி தப்பிக்க முடியாது என்று இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித் துள்ளார்.

அத்துடன், இனப் பிரச்னைக்கான தீர் 15

## அமெரிக்க அரசின் தீர்மானம் தமது உரிமையை மீறிவிட்டதாம்!

### வழக்குத் தொடர்வேன் என்கிறார் கரன்னகொட



கொழும்பு, மே 03

அமெரிக்க அரசாங்கம் தனக்கும் தனது குடும்பத்துக்கும் விதித்த தடையின் மூலம் தனது உரிமை மீறப்பட்டு விட்டது என்று தெரிவித்து அந்த நாட்டின் இலங்கைக்கான தூதுவர் ஜூலி சங்குக்கு கடிதம் எழுதியுள்ளார் வட மேல் ஆளுநரும் முன்னாள் கடற்படை தளபதியுமான வசந்த கரன்னகொட.

அவரின் கடிதத் 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது…!

இலங்கைத் தமிழரசு கட்சியின் அடுத்த தலைவர் யார் என்ற கேள்வி இன்று பலர் மத்தியில் கேள்வியாகவே இருந்து கொண்டிருக்கின்றது.

இதுவரை அந்தப் பதவிக்கு வர யார் யார் காய் நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது பற்றிப் பலரும் தத்தமது ஊகங்களை தெரிவித்துவந்த நிலையில் அதுகுறித்து முதல் தடவையாக அதன் தற்போதைய தலைவர் மாவை சேனாதிராசா வாய் திறந்திருக்கிறார்.

அந்தப் பதவிக்கு தமிழரசுக் கட்சியின் எம். பிக்களான சுமந்திரன் மற்றும் சிறீதரன் ஆகியோர் குறிவைத்துள்ளனர் என்றும் அவர்களோடு வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானமும் தலைமைப் பதவிக்கு குறிவைத்துள்ளார் எனவும் மாவை சேனாதிராசா அண்மையில் தெரிவித்துள்ளார்.

இணைய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே தமிழரசு கட்சியின் தலைமைப் பதவிக்கு வரலாற்றில் என்றுமில்லாதவாறு போட்டி நிலவுகின்றது என மாவை சேனாதிராசா தெரிவித்திருக்கிறார்.

தலைமைப் பதவி குறித்த நகர்வுகளில் சிறீதரன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் கடந்த தேர்தலின்போதே களமிறங்கிவிட்டனரெனவும் சுமந்திரனை வெல்ல வைப்பதற்கு சிறீதரன் உதவியமைக்கான காரணமும் தலைமைப் பதவியைக் குறிவைத்ததாகவே அமைந்தது என்றும் மாவை சேனாதிராசா குறிப்பிட்டுள்ளார்.

தலைமைப் பதவியைக் குறிவைத்து, இம் மூன்று பேரும் பல்வேறு நகர்வுகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

கடந்த தேர்தலின்போது திடீரென்று சிறீதரன், சுமந்திரனை ஆதரித்து அறிக்கை வெளியிட்டது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

சுமந்திரனை அவர் அன்ரன் பாலசிங்கம் ‘லெவலுக்கு’ உயர்த்தி பேசியது பலரையும் முகம்சுழிக்க வைத்ததும் அதனாலேயே சிறீதரன் பல ஆயிரம் வாக்குகளை அந்தத் தேர்தலில் இழந்துபோனதும் வேறு கதை.

ஆனால், அப்படி அவர் ஆதரிக்க முடிவெடுத்தது எதனால் என்பது அவர்கள் இருவருக்கும் மாத்திரமே தெரிந்த சங்கதி.

அந்தத் தேர்தலில், ஒரு முக்கிய தலைவரான காலஞ்சென்ற மங்கள சமரவீர மாத்தறை மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிட மனு தாக்கல் செய்திருந்தார். ஆனால், மனுத்தாக்கல் செய்த பின்னர் பாராளுமன்ற அரசியலில் இருந்து ஒதுங்குவதாகத் திடீரென்று அறிவித்த மங்கள சமரவீர, தனக்கு வாக்களிக்கவேண்டாம் என்று வாக்காளர்களைக் கேட்டுக்கொண்டார்.

இதேபோன்ற ஒரு முடிவை தானும் எடுத்திருக்கிறார் என்று ஒரு தலைவர் சிறீதரனிடம் தெரிவித்தார் என்றும் அதனை அவர் விரும்பவில்லை எனவும் ஒரு தகவல் அப்போது கூறப்பட்டது.

அவ்வாறான ஒரு தகவல் அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்ட காலத்திலேயே சிறீதரன் திடீரென்று சுமந்திரனுக்கு ஆதரவளிக்கும் முடிவை அறிவித்திருந்ததுடன், தான் தோற்றாலும் பரவாயில்லை அவரை வெல்ல வைக்க வேண்டும் என்று அறிக்கை விடுத்தார். அவ்வாறு கூறியிருந்தாலும் தான் வெற்றிபெறுவேன் என்பதில் அவருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்ததும் தெரிந்ததுதான்.

அவ்வாறு சுமந்திரனுக்கு ஆதரவளிக்க அவர் முடிவெடுத்தபோதே, தமிழரசு கட்சியின் தலைவராக தான் வருவதற்கு சுமந்திரன் அப்போது தனக்கு ஆதரவளிக்க வாக்குறுதி அளித்திருந்தாரெனவும் அந்த வாக்குறுதியை அவர் நிச்சயம் நிறைவேற்றுவார் என்றும் சிறீதரன் அண்மையில் தெரிவித்திருந்ததும் கவனிக்கத்தக்கது.

ஆக, அது இவர்கள் இருவருக்கும் இடையேயான ஓர் எழுதப்படாத ஒப்பந்தம் என்பது புரிந்து கொள்ளக் கூடியதே. சிறீதரனின் இந்த அறிவிப்புக்கு இதுவரை சுமந்திரன் எதிர்வினையாற்றவில்லை என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

ஆனால், அரசியலில் எப்போதுமே கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்பது அவசியமில்லைத் தானே?

அப்படி ஓர் அவசியம் நமது அரசியலில் இருந்திருக்குமானால் அதுவும் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவேண்டும் என்பதற்காகவே அவர் அரசியலில் இருந்தே ஒதுங்கியிருக்க வேண்டியல்லவா வந்திருக்கும்.

இப்போது அதுவல்ல நாம் சொல்ல வருவது.

தமிழரசு கட்சிக்கு புதிய தலைவர் தெரிவுக்காக மூன்று பேர் களமிறங்கி விட்டிருக்கின்றனர் எனவும் அவர்கள் மூவரும் அதற்கான காய் நகர்த்தல்களில் ஈடுபட்டிருக்கின்றனர் என்றும் தெரிவித்திருக்கும் மாவை சேனாதிராசா, தானும் அந்த பதவியில் தொடர விரும்புகிறாரா என்பதைப் பகிரங்கமாக சொல்லவில்லை என்றாலும், அவரும் போட்டிக் களத்தில் இருக்கிறாரா என்பது தெரியவில்லை.

ஆனால், அப்படி ஒரு போட்டி ஏற்பட்டால் அது தமிழரசு வரலாற்றில் எப்போதுமே நடக்காத ஒன்று என்றும் - எப்போதுமே கட்சிக்கு தலைவர் தெரிவு என்பது போட்டியின்றியே நடந்திருக்கின்றது என்பதையும் அவர் அறியாதவரல்ல.

அவ்வாறு தலைவர் பதவிக்கு மூவர் குறிவைத்திருக்கின்றனர் என்று சொல்கின்ற மாவை, அப்படியில்லாமல் மூவரையும் சமாதானப்படுத்தி அவர்களில் ஒருவர் தலைவராக தெரிவாவதற்கு முயற்சி செய்வாரா என்பதையும் சொல்லியிருக்க வேண்டும்.

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் சிறீதரனே எப்போதும் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றிருக்கிறார். அதாவது, மக்கள் ஆதரவுள்ள தலைவராக அவரே தமிழரசில் இருக்கிறார் என்பது தெரிந்தது தான்.

தனது தலைமையை பலப்படுத்துவதற்காகவே கிளிநொச்சியில் அடிக்கடி தமிழரசு சார்பில் அரசியல் வைபவங்களையும் நடத்தி வருகிறார். தமிழரசுக்கு எழுபத்தி ஐந்தாவது ஆண்டு தொடக்கவிழா என்று கடந்த ஆண்டே சர்ச்சைக்குரிய விழாவை நடத்தினார்.

மிக அண்மையில் தமிழரசின் மே தின வைபவத்தை மக்கள் திரளுடன் நடத்திக் காட்டினார். ஆனால், அவரின் செயல்பாடுகள் முழுவதும் கிளிநொச்சியைச் சுற்றியே நடந்து கொண்டிருக்கின்றன. தமிழரசு என்பது கிளிநொச்சிக்கான கட்சி அல்ல என்பதையும் அது வடக்கு - கிழக்கு தழுவிய மாபெரும் இயக்கம் என்பதையும் அவர் புரிந்து கொண்டதாகவும் தெரியவில்லை.

எது எப்படியோ, தலைவர் தெரிவு என்பது விரைவில் நடக்கவிருக்கின்றது என்பது மாத்திரம் இப்போது உறுதியாகியிருக்கின்றது.

மாவையின் பாஷையில் சொல்வதானால் ‘ரேசில்’ யார் வெற்றிபெறுகின்றார்கள் என்று பொறுத்திருந்து பார்ப்போம்.!

- ஊர்க்குருவி

## டெங்கு நுளம்பு பெருகாமல் சூழலை தூய்மைப்படுத்துங்கள்!

### சுகாதார சேவைகள் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், மே 03

தங்போது மழை பெய்து வருவதால் சுற்றாடலில் உள்ள நுளம்பு பெருகும் இடங்களை சுத்தம் செய்து, நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்துமாறு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தில் குறைவான டெங்கு தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். இந்த வருடத்தில் 1,132 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். நீர்கொழும்பை சேர்ந்த பெண் சிப்பாய் விடுமுறையிலிருந்து யாழ்ப்பாணம் முகாமுக்கு திரும்பிய பின் உயிரிழந்தார் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, மலேரியா பரவும் நாடுகளுக்கு செல்பவர்கள் மருந்துகளை பெற்ற உரிய வழிகாட்டுதல்களை பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (ஐ)

## சுரேஷின் அரசியல் முடிவு இன்றைய தினம் தெரியும்

### ரணில், சஜித் தரப்புகளுடன் சந்திப்பு

கொழும்பு, மே 03

பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோரின் பிரதிநிதிகளை சந்தித்து இன்றைய தினம் தனது அரசியல் முடிவை தீர்மானிக்கவுள்ளார் என்று அவரே கூறியுள்ளார்.

“ஐக்கிய மக்கள் சக்தி தலைமை மற்றும் அரசாங்கம் குறித்து நான் சில விமர்சன கருத்துக்களை தெரிவித்த பிறகு இரு தலைவர்களும் என்னை அணுகினர். கடந்த ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் மடுல்சீமை தோட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தை எதிர்க்கட்சித் தலைவர் முற்றாகப் புறக்கணித்துள்ளதுடன் மன்னிப்புக்கூட கேட்காததால் நான் சோர்வடைந்துள்ளேன்.

மேலும், தோட்டத் தொழிலாளர்களுக்கு தினசரி ஊதியம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. நான் விமர்சன கருத்துக்களை தெரிவித்த பிறகு இரு தலைவர்களும் என்னை அணுகினர். இரண்டு கூட்டங்களிலும் கலந்து கொண்டு என் தலைவிதியை முடிவு செய்வேன்,” என்றார். (ஐ)

## பொலிஸ் சீருடையில் மேடையேறி பாடிய கான்ஸ்டபிள் பணி நீக்கம்!

கொழும்பு, மே. 03

களனி பியகம வீதியில் இடம்பெற்ற இசைக் கச்சேரியின்போது, பொலிஸ்சீருடையுடன் மேடையில் ஏறிப் பாடல் பாடிய மைக்காக பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டார் என பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

பேலியகொடை பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் 52 வயதுடைய பொலிஸ் கான்ஸ் டபிள் ஒருவரே இவ்வாறு பணி இடைநீக்கம் செய்யப் பட்டுள்ளார்.

கடந்த 30ஆம் திகதி இரவு களனி விளையாட்டு மைதானத் தில் இந்த இசைக் கச்சேரி இடம் பெற்றதாகவும், அங்கு பாதுகாப் புக் கடமைகளுக்காக நிறுத்தப் பட்டிருந்த கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு மேடை ஏறி பாடல் பாடியதாகவும் தெரிய வருகிறது.

இதையடுத்து நடந்த விசாரணைகளைத் தொடர்ந்து நேற்று முன் தினம் முதல் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## செம்பசுமை மே தின கூட்டம் நல்லூரில் நடைபெற்றது!

யாழ்ப்பாணம், மே 03

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் செம்பசுமை மே தினப் பொதுக் கூட்டம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை நல்லூரில் எழுச்சிபூர்வமாக இடம்பெற்றது.

நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெற்ற இப்பொதுக் கூட்டத்துக்குத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் இணைப்பாளர் நா. பார்த்தீபன் தலைமை தாங்கினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல்துறைத் தலைவர் பேராசிரியர் கே. ரி. கணேசலிங்கம், அரசியல் ஆய்வாளர் நிலாந்தன், தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி. எஸ். சிவகரன் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் ஆகியோர் சிறப்புரை ஆற்றியிருந்தார்கள்.

கொரோனா தொற்று உலகம் முழுவதும் பொருளாதாரத்தை வீழ்ச்சியடைய செய்துள்ளது. இந்நிலையில்,காலநிலை மாற்றம் காரணமாக விரைவில் பில்லியன் கணக்கானோர் தொழில் வாய்ப்பை இழக்க வேண்டி ஏற்படுமென்று ஐக்கியநாடுகள் சபை எச்சரித்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டே தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தொழிலாளர் தினத்தைச் ‘சுற்றுச்சூழல் பாதுகாப்பே உழைப்புக்கான உத்தரவாதம்’ என்ற கருப்பொருளில் செம்பசுமை மே தினமாகக் கொண்டாடியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ‘டெங்கு 3’ கிருமி மீண்டும் பரவல்!

கொழும்பு, மே 03

சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி நிறுவனம் நடத்திய சோதனைகளின்படி, இலங்கையில் பல வருடங்களின் பின்னர் மீண்டும் ‘டெங்கு 3’ கிருமி பரவி வருவதாக கொழும்பு மாநகர சபையின் பிரதம மருத்துவர் ருவான் விஜயமுனி தெரிவித்துள்ளார்.

இதனால் ஒருவருக்கு காய்ச்சல் இரு தினங்களுக்கு மேல் காணப்படுமாயின், டெங்கு பரிசோதனை நடத்துவதன் ஊடாக அதனை கட்டுப்படுத்த முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

‘டெங்கு 3’ பரவலுக்கு நோய் எதிர்ப்பு மருந்துகள் இல்லை. இந்த வைரஸ் பரவும் அபாயம் காணப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
03.05.2023 புதன்கிழமை
சோபகிருது வருடம், சித்திரை 20

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அதிகாரத்தின் அரூப கரங்கள்?

அதிகாரம் எவ்வாறெல்லாம் தொழில்படும் - அது எவ்வாறு நம்மீது செல்வாக்கு செலுத்தும் - எவ்வாறான வடிவங்களில் அது நம்மீது ஆதிக்கம் செலுத்தும்? இப்படியான கேள்விகளுக்கு பதிலை காண்பது மிகவும் சிரமமானது. இலங்கைத் தீவு விரும்பியோ, விரும்பாமலோ அதிகார மோதலில் ஈடுபடும் பலம்பொருந்திய சக்திகளின் பார்வைக்குள் சிக்கியிருக்கின்றது. இதிலிருந்து எவ்வாறு மீண்டெழுவது என்பதற்கு எவரிடமும் பதிலில்லை. இது ஒரு வகையில் கத்தியின்மீது நடப்பது போன்றது - எப்போது வேண்டுமானாலும் கயிறு அறுந்துவிடலாம். இலங்கைத் தீவு இதுவரையில் ஜனநாயக அதிகாரங்களின் செல்வாக்குக்குள் மட்டும்தான் இருந்திருக்கின்றது. ஆனால், இப்போது முதன்முறையாக இடதுசாரித்துவ - ஒரு கட்சி சர்வாதிகாரத்தின் மூலம் வழி நடத்தப்படும் சீனாவின் செல்வாக்கையும் எதிர்கொள்ள வேண்டிய நிலைக்குள் சென்றிருக்கின்றது.

இந்திய - அமெரிக்க - மேற்குலக தலையீடுகளுக்கும் சீனாவின் தலையீடுகளுக்கும் அடிப்படையான வேறுபாடுண்டு. இலங்கை ஒரு ஜனநாயக நாடு - என்னும் வகையில் இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற ஜனநாயக சக்திகளுடன் ஊடாடுவது சிக்கலான ஒன்றல்ல. ஆனால், ஜனநாயக முறைமையை முற்றிலுமாகவே நிராகரித்துச் செயல்படும் சீனாவுடன் ஊடாடுவதிலுள்ள நெருக்கடிகள் சிக்கலானவை. அது கையாள்வதற்கு கடினமானது. இது தொடர்பில் தமிழ் சூழலிலும் அதிக அவதானம் தேவை.

சீனா உலகெங்கும் பல்கலைக்கழகங்களோடு ஊடாடுவதில் அதிக ஆர்வத்தை காண்பித்து வருகின்றது. இந்தப் பின்புலத்தில் சீனாவின் கன்பூசியஸ் நிலையம் சர்வதேச அளவில் சர்ச்சைக்குரிய ஒன்றாக நோக்கப்படுகின்றது. சீன கம்யூனிஸ்ட் கட்சி அதன் செல்வாக்கை விரிவுபடுத்துவதற்கான ஒரு கருவியாக கன்பூசியஸ் நிலையங்களை பயன்படுத்தி வருவதாக -குறிப்பாக உளவு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதாக அமெரிக்க காங்கிரஸ் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து கன்பூசியஸ் நிலையங்கள் அமெரிக்காவின் கண்காணிப்புக்குள் கொண்டுவரப்பட்டன.

தற்போது பிரித்தானியாவில் இது முக்கிய அரசியல் விவாதமாக மாறியிருக்கின்றது. பிரித்தானியாவில் 30 பல்கலைக்கழகங்களில் கன்பூசியஸ் நிலையங்கள் இயங்கிவருகின்றன. இவைகள் மூலம் பிரித்தானியாவின் சிவில் சுதந்திரம் கேள்விக்கு உள்ளாகியுள்ளதாக கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து பிரித்தானிய பிரதமர் அனைத்து கன்பூசியஸ் நிலையங்களையும் மூடுவதற்கான உத்தரவைப் பிறப்பித்திருக்கின்றார். சீனாவை பொறுத்தவரையில் அமெரிக்க மற்றும் மேற்குலகம் பனிப்போர் மனநிலையில் செயல்படுவதாகக் குற்றம்சாட்டி வருகின்றது. ஆனால், கன்பூசியஸ் நிலையங்களை தொடர்சியாக, கண்காணித்ததன் மூலம் சில விடயங்களை பிரித்தானிய அதிகாரிகள் வெளியிட்டிருக்கின்றனர்.

அதாவது, கன்பூசியஸ் நிலையங்களுக்கான பணியாளர்கள் - தேர்வு செய்யும் முறைமையானது பிரித்தானிய சட்டங்களுக்கு முரணானது. அதாவது, பணியாளர்களை தெரிவு செய்யும் போது அவர்களின் அரசியல், பால் நிலைத் தெரிவு, மதம், இனவாத பிரச்னைகளால் பாதிக்கப்பட்டவர்களா என்பதை நோக்குதல், அவர்களின் அரசியல் நடத்தைகள் அத்துடன், பணிக்காலத்தில் குழந்தை பெற்றுக்கொள்வதில்லை என்னும் உறுதிமொழி போன்ற விடயங்களின் அடிப்படையிலேயே பணியாளர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். இவ்வாறான நடைமுறை பிரித்தானிய சட்டத்துக்கு முற்றிலும் முரணானது.

சீன பல்கலைக்கழகங்கள், சீன அரச நிறுவனங்கள் மற்றும் சீனாவின் மொழி மற்றும் கல்வி பரிவர்த்தனை நிலையங்கள் என்னும் பெயரிலேயே கன்பூசியஸ் நிலையங்களுக்கான அனுமதியை சீனா பெறுகின்றது. ஆனால், நடைமுறையில் கன்பூசியஸ் நிலையங்களின் நகர்வுகள் அனைத்தும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் நேரடி மேற்பார்வையிலேயே இருப்பதாகவே கண்டறியப்பட்டுள்ளது.

அமெரிக்க செனட் 2019இல் முக்கியமான மாற்றங்களின்றி கன்பூசியஸ் நிலையங்களை தொடர்ந்தும் இயங்க அனுமதிக்கக்கூடாதென்று அறிக்கையிட்டது. இதனை கண்காணிப்பின்றி பல்கலைக்கழங்களின் அனுமதிப்பதன் மூலம் அமெரிக்காவின் கல்விச் சுயாதீனம் பாதிக்கப்படுவதாக செனட் குறிப்பிட்டது. தென்னிலங்கை பல்கலைக்கழகங்கள் சிலவற்றில் கன்பூசியஸ் நிலையம் இயங்குகின்றது. ஆனால், அண்மைக்காலமாக வடக்கு - கிழக்கு பல்கலைக்கழகங்களிலும் இவ்வாறான கன்பூசியஸ் நிலையங்களை உருவாக்குவதில் சீனா ஆர்வம் காண்பிக்கின்றது. வளர்ச்சியடைந்த நாடுகளின் பல்கலைக்கழகங்களே திணறுகின்றபோது நம்மால் இவ்வாறான விடயங்களை கையாள முடியுமா? எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியிருக்கின்றது - என்பது மட்டுமே உண்மையானது. இல்லாவிட்டால் - நமது நிலைமையானது வேலியால் விழுந்தவரை மாடு மிதித்த கதையாகிவிடலாம்.

## வில்லிசை நிகழ்வு

*யாழ்ப்பாணம், மே 03*

புன்னாலைக்கட்டுவன் திடற்புலம் நரசிங்க வைரவர் ஆலயத்தின் வருடாந்த பூங்காவனத் திருவிழாவை முன்னிட்டு கலைநிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

ஆலயத்தின் பிரதான மண்டபத்தில் இன்று புதன்கிழமை இரவு 10 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப் பில் இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நரசிங்க வைரவர் அறநெறி பாடசாலை மாணவர் களின் கலை நிகழ்வை தொடர்ந்து சுழிபுரம் அம்பாள் வில்லிசை குழுவினர் வழங்கும், 'வள்ளி திரும ணம்' வில்லிசை இடம் பெறவுள்ளது. (ஐ)

## பெரியபுராணம் சொற்பொழிவு தொடர்!

*கொழும்பு, மே 03*

சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவசிறீ பால. திருகுணானந்தக் குருக்கள் அனுசரணையில் வாராந்தம் சிறப்பு சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடக்கும் சொற்பொழிவு தொடர் - 04 உரும்பிராய் சொர்க்கநாதர் சிவாலய பிரதான மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

சேக்கிழார் பெருமானின் குருபூசையை தொடர்ந்து சொற்பொழிவை சைவப் புலவர் ச. முகுந்தன் 'மொழியால் புகழ முடியுமோ' என்னும் தலைப்பில் ஆற்றுவார்.

சொற்பொழிவு நிறைவில் கேள்விகள் கேட்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படவுள்ளது. (ஐ)

## நேர்முக வர்ணனை

*யாழ்ப்பாணம், மே 03*

நீர்வேலி கந்தசுவாமி ஆலய வருடாந்த தேர்த் திருவிழா நாளை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தத் தேர்த் திருவிழாவை சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சைவப்புலவர் பொன். சந்திரவேல், இளம்சைவப்புலவர் ச. நவநீதன் ஆகியோரின் நேர்முக வர்ணனை செய்யவுள்ளனர். (ஐ)



## சந்நிதியான் ஆச்சிரமத்தால் மாணவர்களுக்கு சைக்கிள்கள்!

*வடமராட்சி, மே 03*

சந்நிதியான் ஆச்சிரமத்தின் வாராந்த உதவி வழங்கும் நிகழ்வில் நான்கு மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி - பொன்நகர் மத்தி கிராமத்தை வசிப்பிடமாகவுள்ள இ. செபஸ்ரியன் பீற்றர், கஜேந்திரன் நாகராணி, கந்தசாமி உதயகுமார் ஆகிய மாணவர்களுக்கும், முல்லைத்தீவு மாவட்டம் - உடையார்கட்டை சேர்ந்த அழகு சர்மிளா ஆகியோருக்கே சைக்கிள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இந்த செயல்திட்ட உதவிகளை மோகனதாஸ் சுவாமிகள் வழங்கி வைத்தார். (ஐ-02)



## பருத்தித்துறை கோட்டுவாசல் சண்டிகா அம்மனுக்கு திருமுழுக்கு

*வடமராட்சி, மே 03*


பருத்தித்துறை கொன்றை மர நிழல் நாயகி கோட்டுவாசல் சிறீ சண்டிகா பரமேஸ்வரி ஆலய பெருந்திருவிழாவின் ஏழாம் திருவிழாவான திருமுழுக்கு திருவிழா நேற்று அதிகாலை 4:00 மணியளவில் உஷாக்கால பூசையுடன் ஆரம்பமாகி, தம்ப பூசை வசந்த மண்டப பூசை என்பன இடம் பெற்று சிறீ சண்டிகா பரமேஸ்வரி அம்மன் வீதி வலம் வந்தார்.

இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் தானு மகாதேவக் குருக்களின் நல்லாசியுடன் திருவிழா குரு ஸ்வர்க்கியசிறி பிரம்ம சிறி தானு வாசுதேவ சிவாச்சாரியார், கோட்டுவாசல் அம்மன் ஆலய பிரதம குரு ஜெயவர்ஸதாங்க குருக்கள் , ஆலய நித்தியகுரு சிவசிறீ உலகாந்த புஷ்பராசா குருக்கள் ஆகியோர் இணைந்து கிரியைகளை நடத்தினர்.

இதில் கோட்டுவாசல் வாசல் கொண்டல் நாயகி அடியார்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, இன்று புதன் கிழமை வேட்டைத் திருவிழாவும் நாளை வியாழக் கிழமை தேர்த் திருவிழா வும் நடைபெறவுள்ளன. (ஐ-02)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



மே - 03 புதன்கிழமை
சோபகிருது வருடம் - சித்திரை 20
நல்ல நேரம் : 09.00 - 10.00
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : திரையோதசி



## இன்றைய ராசிபலன்

**மேடம்** குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். அமோகமான நாள்.

**இடபம்** புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் எல்லோரும் மதிப்பார்கள். புதுமை படைக்கும் நாள்.

**மிதுனம்** திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**கடகம்** பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் அடைவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்கள் கருத்துக்கு செவிமடுப்பார்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**சிம்மம்** குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புதிய அத்தியாயம் தொடங்கும் நாள்.

**கன்னி** ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பல வேலைகளையும் இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். வேலையாட்கள் அதிருப்தி அடைவார்கள். சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**துலாம்** குடும்பத்தை பற்றிய கவலைகள் வந்து போகும். வியாபாரத்தில் பாக்கிகளை போராடி வசூலிப்பீர்கள். உத்தியோகத்தில் சோர்வு வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**விருட்சிகம்** ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் நினைத்ததை முடிப்பீர்கள். இனிமையான நாள்.

**தனுசு** எதையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். முயற்சியால் முன்னேறும் நாள்.

**மகரம்** கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். திடீர் பணவரவு உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

**கும்பம்** சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான வேலைகளை எல்லாம் கையில் எடுத்து கொள்ளாதீர்கள். வேலையாட்களை பகைத்து கொள்ளாதீர்கள். புதிய முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**மீனம்** பிள்ளைகள் உங்கள் அருமையைப் புரிந்துகொள்வார்கள். புதிய வாடிக்கையாளர்கள் உங்களைத் தேடி வருவார்கள். உயரதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். தன்னம்பிக்கை நாள்.

# அ. தி. மு. க. ஆட்சியாளர்களின் ஊழல் நீதிமன்றுக்கு செல்லும்!

## முதல்வர் ஸ்டாலின் உறுதி

சென்னை, மே 03

அ. தி. மு. க. ஆட்சியாளர்கள் மீதான ஊழல் வழக்குகள் அனைத்தும் நிச்சயம் நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்று 'உங்களில் ஒருவன்' நிகழ்ச்சியில் பேசிய தமிழ்நாடு முதல்வர் மு. க. ஸ்டாலின், தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் முதல்வரிடம்,"கடந்த அ. தி. மு. க. ஆட்சியில், அப்போதைய முதலமைச்சரின் பொறுப்பில் இருந்த பொதுப்பணித்துறை கேள்வி கோரல்கள் வழங்கியதில் தொடங்கி, பொலிஸ் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தில், பிரதமர் வீடு கட்டும் திட்டத்தில் என பல்வேறு திட்டங்களிலும் பெருமளவு முறைகேடு நடந்துள்ளதாக சி. ஏ. ஜி. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதுகுறித்து நடவடிக்கைகள் எடுக்கப்படுமா? ஏற்கனவே



அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர்கள் மீதான ஊழல் புகார்கள் தொடர்பாக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளின் நிலை என்ன?" என்று கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த முதல்வர் ஸ்டாலின், "கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையில்லை! அ. தி. மு. கவின் ஊழல் ஆட்சியை பற்றி மக்களுக்கு நன்றாக தெரியும். அதை சி. ஏ. ஜி. அறிக்கையும் உறுதி செய்திருக்கிறது. ஆதாரபூர்வமாக உறுதிப்படுத்தியிருக்கிறது. இதுகுறித்து அடுத்தகட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்படும். ஊழல் தடுப்பு சட்டத்தில் 2018ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சில திருத்தங்களின் அடிப்படையில், இந்த விசாரணைகளை முன்னெடுத்துச் செல்ல சில முன் அனுமதிகளையும் இசைவு ஆணைகளையும் பெற வேண்டியுள்ளது. அந்த அடிப்படையில் விசாரணை நிறைவடைந்து, கடந்த அ. தி. மு. க. ஆட்சியாளர்கள் மேல் இருக்கும் ஊழல் வழக்குகள் அனைத்தும் நிச்சயம் நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உப்பு தின்றவர்கள் தண்ணீர் குடித்துத்தான் ஆக வேண்டும். அது உறுதி" என்றார்.

(ஐ)

# தி. மு. கவின் ஆட்சியை விரட்டுவதில் அ. ம. மு. கவின் பங்கு அதிகமிருக்கும்!

## தினகரன் தெரிவிப்பு

சென்னை, மே 03

தி. மு. க. ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவதில் அ. ம. மு. கவின் பங்கு முதன்மையானதாக இருக்கும் என்று கட்சியின் பொதுச்செயலாளர் டி. டி. வி. தினகரன் தெரிவித்துள்ளார்.

அ. ம. மு. கவின் அம்மா தொழில்சங்க பேரவை சார்பில் மே தின பொதுக்கூட்டம் சென்னை எம். ஜி. ஆர். நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் பேசிய அவர்,

தொழிலாளர்கள் போராடி பெற்ற 8 மணி நேர வேலை உரிமையை இந்தியாவில் செயல்படுத்தி 100 ஆண்டு நிறைவடையும் வேளையில், 12 மணி நேர வேலை சட்டத்தை தி. மு. க. அரசு கொண்டு வருகிறது.

ஏற்கெனவே, தமிழக இளைஞர்கள் மது கலாசாரத்தால் பாதிக்கப்பட்டு, மதுக்கடைகளை மூட வேண்டும் என்று அனைத்துத் தரப்பு மக்களும் கோரிக்கை வைத்துவரும் வேளையில், தானியங்கி இயந்திரங்கள் மூலம் மது கிடைக்கும் என்று அறிவிக்கின்றனர். திருமண மண்டபங்களில் சிறப்பு அனுமதி பெற்று மது பரிமாறிக் கொள்ளலாம் என்று அறிவித்துவிட்டு, அதை திரும்பப் பெறுகின்றனர்.

இதற்காகத்தான் இவர்களை 10 ஆண்டுகள் ஆட்சிக்கு வர விடாமல் ஜெயலலிதா தடுத்து வைத்தார். இந்த ஆட்சியை மக்கள் வீட்டுக்கு அனுப்பும் காலம் வெகுதொலைவில் இல்லை. அதில் அ. ம. மு. கவின் பங்கு முதன்மையானதாக இருக்கும் - என்றார்.

# தமிழகத்தில் வெளிநாட்டு நிறுவனங்கள்

சென்னை, மே 03

தமிழ்நாட்டில் தொழில்களை ஆரம்பிப்பதற்கு முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

சென்னை தலைமை செயலகத்தில், முதல்வர் ஸ்டாலின் தலைமையில் தமிழ்நாடு அமைச்சரவை கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை நடந்தது.

இந்தக் கூட்டத்தில், சில முக்கிய கொள்கை முடிவுகள் எடுக்கப்பட்டன. குறிப்பாக, 5 வெளிநாட்டு நிறுவனங்கள் தமிழகத்தில் தொழில் தொடங்குவதற்கான நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது.

கருணாநிதியின் நூற்றாண்டு விழா கொண்டாட்டம் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

(ஐ)



உலகப் பிரசித்தி பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் மீனாட்சி - சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம் நேற்று நடைபெற்றது...!

# சு.க. தலைமையிலேயே அடுத்த ஆட்சி அமையும்

## கூறுகின்றார் மைத்திரிபால



கொழும்பு, மே. 03

**சுதந்திரக் கட்சி ஆட்சியமைக்கும் வரையில் எதிர்கா லத்தில் அரசியல் கூட்டணியில் தாம் அங்கம் வகிக்கப் போவதில்லை என அந்தக் கட்சியின் தலைவர் மைத்தி ரிபால சிறிசேன தெரிவித்தார்.**

சுதந்திரக் கட்சியின் தலை மையிலேயே அடுத்து ஆட்சி அமைக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கண்டியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

சுதந்திரக் கட்சியின் தலை மையிலேயே அடுத்து ஆட்சி அமைக்கப்படும். அதற்கு எவரது தயவும் எமக்கு தேவையில்லை. எவருக்கேனும் எமது தோழமை வேண்டும் என்றால் எம்மோடு இணைத்து கொள்ளலாம்.

எமது ஆட்சிக்கு தேவையான பல கொள்கைகள் எம்மால் தயா ரிக்கப்பட்டுள்ளன. எமது ஆத ரவு இல்லாமல் எந்தக் கட்சியா லும் இலங்கையில் இனிமேல் ஆட்சியமைக்க முடியாது.

ஒற்றுமையின் ஊடாகவே நாட்டை அபிவிருத்தியடைச் செய்ய முடியும். ஆகவே அனைத்து இன மக்கள் மத்தியி லும் நல்லிணக்கத்தை கட்டியெ ழுப்பவேண்டும். முட்டாள்தன மாக இனங்களுக்கிடையில் பிள வுகளை ஏற்படுத்தக்கூடாது.

இதற்கு சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புக்கள் அவசியமா கும். அவர்கள் எமது இறையாண் மையில் தலையிடாமலும் நாட்டை பிளவுபடுத்தாத வகை யிலும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

மேலும் நாட்டில் நீதியை யும் அமைதியையும் நிலைநாட் டும் அரசியலமைப்பு ஒன்று அவ சியம். அத்தோடு நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்யும் அரசாங்கமும் வேண்டும். அதனை நாம் உருவாக்குவோம் - என்றார். (அ)

# நாட்டில் சட்டரீதியான மது பாவனை வீழ்ச்சி!

கொழும்பு, மே. 03

சட்டரீதியான மது பாவனை குறைவடைந்தமை தொடர்பில் ஆராயப்பட வேண்டும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ் சித் சியம்பலாப்பிட்டிய தெரி வித்தார்.

ஊராப்பொல பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துரைத்தபோதே அவர் இதனைக் கூறினார்.

அதேநேரம் பண்டிகைக் காலத்தில் சட்டவிரோத மது விற்பனையுடன் தொடர்புடைய 2 ஆயிரத்து 450 சோதனை நட வடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

கடந்த ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை யான காலப்பகுதியில் இந்த சோதனை நடவடிக்கைகள் முன் னெடுக்கப்பட்டுள்ளன. எனி னும் சட்டவிரோத மது பாவனை யின் ஊடாக சட்டரீதியான மது விற்பனை வீழ்ச்சியடைந்துள் ளதா என்பது தொடர்பில் ஆரா யவேண்டும் என அவர் குறிப் பிட்டார். (அ)

# தொழுநோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, மே. 03

நாட்டில் இல்லாதொழிக் கப்பட்ட தொழுநோய் மீண்டும் பரவும் சூழ்நிலை ஏற்பட்டுள்ள தாகவும், இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் கம்பஹா மாவட்டத்தில் 42 தொழுநோ யாளிகள் பதிவாகியுள்ளதாகவும் கம்பஹா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவ லகம் தெரிவித்துள்ளது.

அறிகுறிகள் தென்படுவது தொடர்பில் சந்தேகம் இருப்பின் உடனடியாக சிகிச்சை பெற்றுக் கொள்ளுமாறு கம்பஹா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் இந்திக்க வன்னிநாயக்க தெரிவித்தார்.

தொழுநோயாளியுடன் நீண்ட நாட்களாக நெருங்கிப் பழகுவதால், உமிழ்நீர் மூலம் நோய் பரவும் வாய்ப்பு உள்ள தால், இது குறித்து கவனம் செலுத்தவேண்டும் என்றும், உடலில் சந்தேகத்திற்கிடமான தழும்புகள் இருப்பின், மருத்துவ சிகிச்சை பெறவேண்டும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, கம்பஹா மாவட்டத்தில் கடந்த வருடம் 138 தொழுநோயாளிகள் கண் டறியப்பட்டதைத் தொடர்ந்து, இவ்வருடம் நோயாளர்களை அடையாளம் காணும் நடவடிக் கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், கடந்த வருடம் இனங்காணப் பட்ட தொழுநோயாளிகளில், கிட்டத்தட்ட எட்டு சதவீத குழந்தைகள் உள்ளதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

தொழுநோய்க்கான அறிகுறி கள் தென்பட்டவுடனேயே முறையான சிகிச்சை பெறுவ தன் மூலம் தொழுநோயைக் குணப்படுத்த முடியும் எனத் தெரிவித்த தொழுநோய் நிபுணர், உடலில் சில சந்தேகத்திற்கிட மான நிறமாற்றப் புள்ளிகள் காணப்படுவதுடன், தழும்புகள் மற்றும் கைகளில் கூச்ச உணர்வு இருப்பது இந்த நோயின் முக்கிய அறிகுறிகளாகும்-என்றார். (அ)

# பாடசாலை உபகரணம் வாங்கித் தருவதாக ஏமாற்றி 13 வயது சிறுவன் துஷ்பிரயோகம்!

கொழும்பு, மே. 03

பாடசாலை உபகரணங்கள் வாங்கித் தருவதாக ஏமாற்றி 13 வயது சிறுவனை துஷ்பிரயோ கம் செய்த குற்றச்சாட்டில் சந் தேக நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஹிரண பிரதேசத்தை சேர்ந்த 49 வயதுடைய ஒருவரென தெரிவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட சிறுவன் எகொட உயன ரயில் நிலையத் துக்கு அருகில் உள்ள கடற்க ரைக்கு அழைத்துச் செல்லப் பட்டு சந்தேகநபரால் துஷ்பிர யோகத்துக்கு உட்படுத்தப்பட் டதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சந்தேக நபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ள அதேவேளை, எகொட உயன பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத் துள்ளனர். (அ)

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்துக்கு பயப்படும் நவீன பயங்கரவாதிகள்!

## திலும் அமுனுகம கூறுகிறார்

கொழும்பு, மே. 03

நவீன பயங்கரவாதிகளே உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை கண்டு அச்சம டைந்துள்ளார்கள் எனவும் திருத் தங்களின்றி பயங்கரவாத எதிர்ப் புச் சட்டமூலம் நிறைவேற்றப்ப டவேண்டும் என்றும் முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச் சர் திலும் அமுனுகம தெரிவித் தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊட கங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

பொதுஜன பெரமுனவின் அரசியல் கொள்கைக்கும், ஐக் கிய தேசியக் கட்சியின் கொள் கைக்கும் இடையில் பாரிய வேறு பாடுகள் காணப்படுகின்றன.

தற்போதைய நெருக்கடியான நிலையில் அரசியல் காரணிக ளுக்கு முக்கியத்துவம் கொடுக்க முடியாது என்பதற்காக ஒன்றி ணைந்து செயற்படுகிறோம்.

காலி முகத்திடல் போராட் டத்தின் ஊடாக மக்கள் முன் வைத்த பல கோரிக்கைகளை நிறைவேற்றியுள்ளோம். ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் பாராளு மன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட் டுள்ளது.

வர்த்தமானியில் வெளியி டப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தற்போ தைய பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது.

ஜனநாயகம் என்று குறிப்பிட் டுக் கொண்டு கடந்த ஆண்டு நாட்டில் இடம்பெற்ற செயற் பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது. தொழில் உரிமை என்று குறிப்பிட்டுக் கொண்டு பேராசிரியர்கள் பரீட்சை விடைத்தாள் திருத்த பணிகளில் ஈடுபடுவதை புறக்கணித்துள் ளார்கள். இதனால் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

நவீன பயங்கரவாதிகள் தான் வர்த்தமானியில் வெளியிடப் பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கு எதிராக போர் கொடி தூக்கியுள்ளார்கள். திருத் தங்களின்றி இந்த சட்டமூலம் சட்டமாக்கப்படவேண்டும். தொழிற்சங்கத்தினரது முறை யற்ற செயற்பாடு ஒட்டுமொத்த மக்களுக்கும் பாதிப்பை ஏற்ப டுத்தியுள்ளது-என்றார். (அ)

## எண்ணெய் கடத்தல்

# எட்டு இலங்கையர் உட்பட 26 பேர் நைஜீரிய நீதிமன்றால் விடுவிப்பு!

கொழும்பு, மே. 03

சர்ச்சைக்குரிய எண்ணெய் கடத்தல் குற்றச்சாட் டுகள் தொடர்பாக கைது செய்யப்பட்ட கப்பல் பணியாளர்களான 8 இலங்கையர்கள் உட்பட 26 பேர் கடந்த ஏப்ரல் 28 ஆம் திகதி ஹார்கோர்ட் டில் உள்ள நைஜீரியாவின் பெடரல் மேல் நீதிமன் றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த ஒகஸ்ட் 2022 ஆண்டு, ஈக்குவடோர் கினியா பகுதியில் வைத்து இவர்கள் கைதுசெய் யப்பட்டதுடன், 26 பணியாளர்களுடன் குறித்த கப்பல் தடுத்து வைக்கப்பட்டது.

நைஜீரிய அதிகாரிகளுக்கும், கப்பல் உரிமை யாளரான இடன் மரிடைம் லிமிடெட் நிறுவனத் துக்கும் இடையே நீதிமன்றத்துக்கு வெளியே ஏற் பட்ட சமரசம், குற்றச்சாட்டுகளை கைவிடுவதற்கு உயர் நீதிமன்றத்திற்கு உதவியுள்ளது.

கப்பல் நிறுவனத்தால் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டவுடன், இலங்கை பணியாளர்களை விரைவில் திருப்பி அனுப்புவது தொடர்பாக கப் பல் உரிமையாளருடன் இலங்கை ஒருங்கிணைந்து, ஏற்பாடு செய்யும் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சின் வேண்டு கோளின்படி, நைஜீரியாவுக்கான அங்கீகாரம் பெற்ற நைரோபியில் உள்ள தூதரகம் உதவிகளை வழங்கி யதுடன், சட்ட நடவடிக்கைகள் முடியும் வரை இலங்கைக் குழுவினரின் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்தது.

கென்யாவுக்கான இலங்கையின் தூதுவர் வேலுப் பிள்ளை கணநாதன், கடந்த 2022 நவம்பர் 13 ஆம் திகதி நைஜீரியாவின் லாகோஸில் உள்ள இலங் கைக் குழுவினரைச் சந்தித்து, நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்படுவதற்குப் பதிலாக, கப்பலில் அவர்க ளின் நலன் மற்றும் தங்குமிடத்தை உறுதிப்படுத் தத் தேவையான நடவடிக்கை எடுத்தார்.

தூதுவர் கணநாதன் இலங்கையர்களுக்கான சம்பளம் மற்றும் ஏனைய உரிமைகளை முழுமை யாக வழங்குவதை உறுதி செய்தார். (அ)

# இலங்கையில் சீனாவின் முதலீடுகள் அதிகரிக்கும்

கொழும்பு, மே. 03

இலங்கைக்கு விஜயம் செய் திருந்த சீனாவின் மிகப் பெரிய பல்நோக்கு கூட்டுத்தாபனமான சைனா மேர்சண்ட்ஸ் குழுமத்தின் தலைவர் இலங்கையில், சீனா வின் சமீபத்திய முதலீட்டுத் திட் டங்களின் முதலீடுகள், ஏறக்கு றைய 2 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டும் என்று கூறியுள்ளார்.

நாட்டுக்கு தனது முதல் விஜ யத்தை மேற்கொண்டுள்ள மியா ஜியான்மின் 15 திட்டங்களுக் காக அம்பாந்தோட்டை சர்வ தேச துறைமுகத்தில், நடை பெற்ற கையெழுத்திடும் நிகழ் வில் கலந்து கொண்டார்.

2008 ஆம் ஆண்டு இலங்கை சந்தையில் நுழைந்த சைனா மேர் சண்ட்ஸ் குழுமம், 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 1.68 பில்லியன் அமெரிக்க டொலர் மொத்த முதலீட்டை மேற் கொண்டுள்ளது.

வளமான அம்பாந்தோட்டை நிலத்தில், சீனா அசாதாரண அத்தியாய த்தை எழுதும், அத்து டன் ஹம் பாந்தோட்டை துறை முகத்தை முன்னோக்கி நகர்த் தும் என்றும் ஜியான்மின் நிகழ் வின்போது கூறியுள்ளார். (அ)

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை முழுமையாக மீளப்பெறவேண்டும்!

## மனித உரிமை அமைப்புகள் வலியுறுத்து

கொழும்பு, மே. 03

**பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டமூலம் என்பனவற்றை முற்றாக நீக்கவேண்டும் என மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.**

**அவ்வாறு நீக்கத் தவறினால் அதற்கு எதிராக அனைத்து மக்களையும் ஒன்றுதிரட்டி மாபெரும் போராட்டத்தை நடத்துவோம் என்றும் அவை எச்சரித்துள்ளன.**

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை முழுமையாக வாபஸ் பெறவேண்டும் என சிவில் உரிமை அமைப்புகள், தொழிற்சங்கங்கள், மாணவர் இயக்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் ஒன்றிணைந்து அரசாங்கத்துக்கு இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

இலங்கையின் வரலாற்றைப் பொறுத்தமட்டில் பயங்கரவாத எதிர்ப்பு என்ற பெயரில் இயற்றப்பட்ட சட்டங்கள் மக்களைக் காப்பதற்காகவன்றி, மக்களை அடக்குவதற்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இச்சட்டத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள், வலிந்து காணாமலாக்கப்படல்கள் உள்ளிட்ட மனித உரிமை மீறல் சம்பவங்களின் விளைவாக தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் என்ற பொதுக்கருத்து வலுப்பெற்றது.

இருப்பினும் இதுவரையில் எந்தவொரு அரசாங்கமும் அச்சட்டத்தை நீக்குவதற்கோ அல்லது அச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு, விசாரணைகளின்றி நீண்ட காலமாகச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கவில்லை என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் அடக்குமுறையின் கைகளில் ஆணிகளுக்குப் பதிலாக இரும்புக்கூர் முனையைப் பொருத்தும் பாணியில் அதற்கு தீர்வு என கூறி பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை அரசாங்கம் கொண்டுவந்துள்ளது என்றும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

சமூக வலைத்தளங்களில் முன்வைக்கப்படும் விமர்சனங்கள், ஊடக செய்திகள், அனைத்து வகையான போராட்டங்கள் மற்றும் பேரணிகளைத் தடை செய்யும் வகையில் கொண்டுவரப்படும் இப்பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை ஏற்றுக்கொள்வதென்பது நாட்டு மக்களின் ஜனநாயகத்தை ஒட்டுமொத்தமாகக் குழிதோண்டிப்புதைக்கும் செயல் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)

# பல வைத்தியசாலைகள் மூடப்படும் ஆபத்துநிலை!

## மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை

கொழும்பு, மே. 03

நாட்டின் பல வைத்தியசாலைகளில் விசேட வைத்திய நிபுணர்களிற்கான பற்றாக்குறை காணப்படுவதாக தெரிவித்துள்ள மருத்துவ நிபுணர்கள் சங்கம், இந்த நிலைக்குத் தீர்வை காணாவிட்டால் பல வைத்தியசாலைகள் மூடப்படும் ஆபத்து உருவாகியுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளது.

அரசாங்கத்தின் புதிய ஓய்வூதியக்கொள்கை காரணமாக அரசாங்க ஊழியர்கள் 60 வயதில் ஓய்வுபெறவேண்டிய நிலை காணப்படுவதாலும் விசேட வைத்திய நிபுணர்கள் பெருமளவில் நாட்டிலிருந்து வெளியேறுவதாலும் நாட்டின் பல பாகங்களில் உள்ள வைத்தியசாலைகளில் வைத்தியர்களுக்கு பற்றாக்குறை காணப்படுகின்றது என மருத்துவ நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அக்கரைப்பற்று, காத்தான்குடி, கல்முனை, கிண்ணியா, ஏறாவூர், திருகோணமலை, கந்தளாய், கிளிநொச்சி, முல்லைத்தீவு உட்பட பல வைத்தியசாலைகளில் விசேட நிபுணர்களுக்கான பற்றாக்குறை காணப்படுவதாக விசேட மருத்துவ நிபுணர்கள் சங்கம் கூறியுள்ளது. (அ)

# டிஜிற்றல் மயமாகும் வானொலி சேவைகள்

கொழும்பு, மே. 03

இலங்கை வானொலி சேவைகளை டிஜிற்றல் மயமாக்குவது தொடர்பில் தொலைத்தொடர்பு ஒழுக்குப்படுத்தல் ஆணைக் குழு அவதானம் செலுத்தியுள்ளது.

உலகிலுள்ள பல நாடுகளில் எவ்.எம் அலைவரிசைகளின் பயன்பாடு குறைவடைகின்ற நிலையிலேயே, இந்தவஹ் தீர்மானத்தை எட்டியுள்ளதாக தொலைத்தொடர்பு ஒழுக்குப்படுத்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, கொழும்பு தாமரை கோபுரத்தின் ஊடாக வானொலி சேவைகளை டிஜிற்றல் மயமாக்கி, கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பகுதிகளுக்கு முதற்கட்டமாக வானொலி டிஜிற்றல் சேவையை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எவ்.எம் அலைவரிசை இல்லாது செய்யப்பட்டு, வானொலி டிஜிற்றல் சேவைவி.எச்.எவ் அலைவரிசை ஊடாக ஒலிபரப்பப்படவுள்ளது.

டிஜிற்றல் வானொலி சேவையை ஆரம்பிப்பதற்கு தேவையான முதலீட்டை, உள்நாட்டு முதலீட்டின் ஊடாக முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், தற்போது பயன்படுத்தப்படும் எவ்.எம் வானொலிகளை நவீனமயப்படுத்த மேம்பாட்டு நவீன கட்டமைப்பொன்று பொருத்தப்பட வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் எவ்.எம் அலைவரிசைகள் முடிவடைந்துள்ளதாகவும், இதுவரை 54 வானொலிகளுக்கு எவ்.எம் அலைவரிசைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தொலைத்தொடர்பு ஒழுக்குப்படுத்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

டிஜிற்றல் வானொலி சேவைக்கான அனுமதி பத்திரம் வழங்கப்பட வேண்டும் எனவும், அதற்கான அரம்பகட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தொலைத்தொடர்பு ஒழுக்குப்படுத்தல் ஆணைக்குழுவின் பதில் பணிப்பாளர் நாயகம் ஹேலசிறி ரணதுங்க தெரிவித்தார்.

டிஜிற்றல் வானொலியை ஆரம்பிப்பதற்கான வசதிகள் கொழும்பு தாமரை கோபுரத்தில் உள்ளமையினால், அந்த இடத்திலிருந்தே டிஜிற்றல் வானொலியை ஆரம்பிக்க முடியும் என அவர் குறிப்பிட்டார்.

டிஜிற்றல் வானொலி ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், அலைவரிசைகளை வழங்குவது குறித்து கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வருவதாக ஆணைக்குழுவின் பதில் பணிப்பாளர் நாயகம் ஹேலசிறி ரணதுங்க கூறினார். (அ)

# போக்குவரத்து பொலிஸாரைத் தாக்கிய இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது

கொழும்பு, மே. 03

பொலிஸாரின் உத்தரவை மீறிச் சென்ற மோட்டார் சைக்கிளை நிறுத்திச் சோதனையிட்டபோது, பாதுகாப்பு தலைக்கவசத்துடன் இரு பொலிஸ் உத்தியோகத்தர்களை தாக்கிக் காயப்படுத்திய நீர்கொழும்பு பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவின் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களால் தாக்கப்பட்ட பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் கான்ஸ்டபிள் ஆகியோர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் குழுவொன்று நேற்று முன் தினம் பிற்பகல் சீதுவை பகுதியில் போக்குவரத்துச் சோதனையில் ஈடுபட்டிருந்தபோது அதிவேகமாக வந்த மோட்டார் சைக்கிளை நிறுத்துமாறு சைகை காட்டினர்.

பொலிஸாரின் சமிக்ஞைகளை மீறி சந்தேகநபர்கள் மோட்டார் சைக்கிளை முன்னோக்கிச் செலுத்தியபோது, சந்தேகநபர்கள் சென்ற மோட்டார் சைக்கிளை இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் துரத்திச் சென்று சீதுவ நகருக்கு அருகில் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

விசாரணையில், சந்தேக நபர்கள் இருவரும் மதுபோதையில் இருந்தமை தெரியவந்தது.

இதையடுத்து, அவர்களை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்த முயன்றபோது, சந்தேகநபர்கள் தடுத்து நிறுத்தி, ஹெல்மெட் அணிந்தவாறு இரு பொலிஸாரையும் தாக்கியுள்ளனர்.

அங்கு வந்த பொலிஸார் சந்தேக நபர்களை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவர் திருகோணமலை கடற்படை முகாமில் பணிபுரியும் 25 வயதுடையவர் எனவும், மற்றைய சந்தேக நபர் சீதுவ பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# வரிசை யுகத்துக்கு முடிவு கட்டியது ரணில் வழங்கிய தலைமைத்துவமே!

## ரவி கருணாநாயக்க பெருமிதம்



கொழும்பு, மே. 03

ரணிலின் தலைமைத்துவம் வரிசை யுகத்துக்கு முடிவு கட்டி நாட்டை முன்னேற்றியுள்ளது என்று முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மே தின நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் மே தினத்தைக் கொண்டாடியிருந்தாலும், இன்று மிக முக்கியமான தருணத்தில் மே தினத்தைக் கொண்டாடுகின்றோம்.

கடந்த காலத்தில் வரிசை யுகம் இருந்தது. தற்போதைய தலைமைத்துவம் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து நாட்டை முன்னேற்றியுள்ளது.

இந்தப் பிரச்சினை இந்த நாட்டின் உழைக்கும் மக்களை மட்டுமல்ல முதலீட்டாளர்களையும் பாதித்துள்ளது. அதனால்தான் புதிதாகச் சிந்திக்க வேண்டும்.

உரிமைக்காக மட்டும் போராடும் காலத்தில் நாம் இல்லை. நாட்டில் ஒரு புதிய சகாப்தத்துக்காக நாங்கள் போராட விரும்புகின்றோம்.

உழைக்கும் மக்கள் அனைவரும் வாழக்கூடிய அமைதியான சூழல் நாட்டில் நிலவவேண்டும். அந்த யதார்த்தத்தை நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

நாட்டை முதன்மைப்படுத்தி உழைப்போம். நாட்டுக்காக உழைப்போம். அப்படிப்பட்ட நாட்டின் உரிமைகளுக்காக போராட வேண்டிய அவசியம் இல்லை. அந்த உரிமைகள் எப்போதும் உங்களை வந்தடையும்.

நாட்டின் பொருளாதாரம் வலுப்பெற வேண்டும். பொருளாதாரத்தை வலுப்படுத்த, உழைக்கும் மக்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் இடையே நல்லிணக்கம் தேவை.-என்றார். (அ)

# பாலியல் கல்வி குறித்து ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் நிகழ்வு இவ்வருடம் முதல்!

கொழும்பு, மே. 03

பாடசாலை மாணவர்களுக்கான பாலியல் கல்வி தொடர்பாக, ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்வு இந்த வருடத்திலிருந்து தேசிய கல்வியியற் கல்லூரிகளில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

முன்பள்ளி பருவத்திலிருந்து பாலியல் கல்வி வழங்கப்படவேண்டும் என சிறுவர்களுக்கான பாராளுமன்ற குழு பரிந்துரைத்திருந்ததாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

பாலியல் கல்வி தொடர்பான பாடத் திட்டம் உள்ள புத்தகம் தயாரிக்கப்பட்டுள்ள போதிலும், அது தொடர்பில் கற்பித்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்க விசேட பயிற்சிகளை வழங்குவதற்கு, அவசியம் ஏற்பட்டுள்ளதாக கல்வியமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

# கிரிக்கெட் மட்டையால் தாக்கப்பட்ட மாணவர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றம்

கொழும்பு, மே. 03

களுத்துறை திஸ்ஸ தேசிய பாடசாலைக்கும் களுத்துறை தேசிய பாடசாலைக்கும் இடையேயான ஒரு நாள் கிரிக்கட் போட்டியின் போது கிரிக்கெட் மட்டையினால் தாக்கப்பட்ட திஸ்ஸ தேசிய பாடசாலையின் உப தலைவர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மக்கோனா பொலிஸார் குறிப்பிட்டனர்.

மக்கோனா பகுதியில் இடம்பெற்ற இந்த கிரிக்கெட் போட்டியில் திஸ்ஸ தேசிய பாடசாலை அணி முதலில் துடுப்பாடியது டன் பதிலளித்தாடிய களுத்துறை தேசிய பாடசாலை அணி இறுதி ஓவரில் வெற்றியிலக்கை கடந்து வெற்றியை பதிவு செய்தது.

பின்னர் மைதானத்தின் நடுவே பொருத்தப்பட்டிருந்த விக்கெட்டுக்களை மாணவர்கள் அப்புறப்படுத்தியதால் மோதல் ஏற்பட்டது.

இதன்போது, திஸ்ஸ தேசிய பாடசாலையின் உப தலைவரை சிலர் கிரிக்கெட் மட்டையால் தாக்கியதாக கூறப்படுகிறது.

சம்பவத்தில் பாதிப்படைந்த அவர், நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (அ)

# வைத்தியசாலையில் இளைஞன் கொலை!

## இளம் தம்பதியினர் கைது!!

கொழும்பு, மே. 03

அனுராதபுரம் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பெண் ஒருவர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மாதவச்சி பிரதேசத்தைச் 27 வயதுடைய நபரொருவரும், 23 வயதான அவரது மனைவியுமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதல் தொடர்பாக மேலும் மூவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மோதலொன்றின்போது பலத்த காயமடைந்து அனுராதபுரம் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மேற்படி இளைஞர் கடந்த 28ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# பஸ்களில் அதிக சத்தத்துடன் பாடல்கள் ஒலிபரப்பத் தடை!

கொழும்பு, மே. 03

பயணிகள் போக்குவரத்து பேருந்துகளில் அதிக சத்தத்துடன் பாடல்கள் ஒலி, ஒளிபரப்பு செய்வதை கட்டுப்படுத்துவதற்கான விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பதில் பணிப்பாளர் நாயகம் கலாநிதி சஞ்சய் ரத்நாயக்க தெரிவித்தார்.

இந்த விதிமுறைகள் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஒழுங்குமுறைகளை தயாரிப்பதற்கு தேவையான தொழில்நுட்ப ஆதரவை மத்திய சுற்றுச்சூழல் ஆணையம் வழங்கியுள்ளது.

இந்த ஒழுங்குமுறைகளை தயாரிப்பது தொடர்பான பல சுற்று கலந்துரையாடல்கள் இதுவரை இடம்பெற்றுள்ளதாகவும், இது தொடர்பான விதிமுறைகளை சுமார் ஆறு மாதங்களில் தயாரித்து இறுதி செய்ய முடியும் எனவும் பதில் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

மேலும் பஸ்களில் அதிக ஒலி எழுப்பும் இசையால் பயணிகள் கடும் அசௌகரியத்திற்கு முகங்கொடுத்துள்ளனர். 120 டெசிபல் ஒலியை சில நொடிகள் கேட்பது உடல் நலத்துக்கு கேடு விளைவிக்கும்.

உரிய விதிமுறைகளைத் தயாரித்த பிறகு, மோட்டார் போக்குவரத்துத் துறை, பொலிஸ் மற்றும் மத்திய சுற்றுச்சூழல் ஆணையம் இணைந்து பஸ்களை ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பஸ்களில் அதிக ஒலி எழுப்புவதை கட்டுப்படுத்துவது தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் ஒழுங்குமுறைகள் தயாரிக்கப்பட்டு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளபோதிலும் குறித்த விதிமுறைகள் முறையாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை எனவும் தெரியவந்துள்ளது.

பஸ்களின் ஹோர்ன்கள் வெவ்வேறு சத்தங்களில் ஒலிக்கப்படுவதாகவும், இவற்றில் பெரும்பாலான ஹோர்ன்கள் இறக்குமதி செய்யப்பட்டவை என்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். (அ)



# வீதியில் இருந்து விலகி விபத்துக்குள்ளான பஸ்

கொழும்பு, மே. 03

நீர்கொழும்பில் இருந்து ஹங்வெல்ல நோக்கிப் பயணித்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று நேற்று காலை கம்பஹா வத்துருகம சாலையில் விபத்துக்குள்ளாகியது.

அதிவேகம் காரணமாக பஸ் வீதியில் இருந்து விலகி விபத்துக்குள்ளானதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின்போது, பஸ்ஸில் 70 பயணிகள் பயணம் செய்ததாகவும், விபத்தில் காயமடைந்தவர்கள் கம்பஹா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# இலங்கை - இந்திய விமானப்படை தளபதிகள் நேற்று சந்தித்து பேச்சு



கொழும்பு, மே. 03

நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நாட்டிற்கு வருகை தந்துள்ள இந்திய விமானப்படைத் தளபதி எயார் சீப் மார்ஷல் ஏ.ஆர். சௌத்ரி மற்றும் விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரண இடையே சந்திப்பு இடம்பெற்றது.

இராணுவப் படையின் தலைமையத்தில் நேற்று இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இந்திய விமானப்படை தளபதி உள்ளிட்டவர்களை விமானப் படையின் கொழும்பு முகாமின் கட்டளையதிகாரி வரவேற்றார்.

விமானப்படையின் வர்ண பிரிவு அணிவகுப்பு மரியாதையும் இதன்போது இடம்பெற்றது.

இரு தரப்பு பயிற்சி நடவடிக்கைகள், பேச்சுவார்த்தைகள், பிராந்திய விமானப் படைகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துதல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேம்படுத்துதல் ஆகியன தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போது நினைவுச்சின்னங்களும் பரிமாறப்பட்டன. (அ)

# கொக்கிளாய் முகத்துவாரத்தில் புத்தர் சிலை உடைத்து சேதம்!

## ஒருவர் பொலிஸாரினால் கைது



முல்லைத்தீவு, மே. 03

முல்லைத்தீவு கொக்கிளாய் முகத்துவாரப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட சிறிய பௌத்த விகாரை மற்றும் புத்தர் சிலையைச் சேதப்படுத்திய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார் என கொக்கிளாய் பொலிஸார் தெரிவித்தனர்.

பௌத்த விகாரைக்கு யாரோ சேதம் விளைவிப்பதாக கொக்கிளாய் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் பொலிஸ் குழுவொன்று குறித்த இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டபோது ஒருவரை கைது செய்தது.

பௌத்த விகாரையின் சுவர்கள் சேதமாக்கப்பட்டுள்ளது டன் அங்கு இருந்த புத்தர் சிலை அகற்றப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீர்கொழும்பு உடப்பு பகுதியைச் சேர்ந்த 33 வயதுடையவர் என கொக்கிளாய் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# 14 தனியார் நிறுவனங்களாக உடைக்கப்படும் மின்சார சபை

கொழும்பு, மே. 03

இலங்கை மின்சார சபை மின்சார சட்டத்தில் முன்மொழியப்பட்ட திருத்தங்களின் கீழ் 14 தனியாருக்குச் சொந்தமான நிறுவனங்களாக உடைக்கப்படும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையம், மகாவலி மற்றும் லக்ஸபான நீர்மின் நிலையங்கள் உட்பட அனைத்து நீர்மின் நிலையங்களும் தனியார் மயமாக்கப்படவுள்ள அரச நிறுவனங்களில் அடங்கும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையின் ஊழியர் வருங்கால வைப்பு நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஓய்வூதிய நிதிகளை நிர்வகிப்பதற்கு புதிய நிறுவனம் ஒன்று ஸ்தாபிக்கப்படும் என்றும் அவர் கூறினார். (அ)

# ம. தி. மு. க.அரசியல்:
# துரைசாமியின் ஆவேச கடிதம்!
## வைகோவின் கட்சிக்குள் என்ன நடக்கிறது?

முரளிதரன் காசி விஸ்வநாதன்



ம.தி.மு.கவிற்குள் நடக்கும் பல்வேறு மாற்றங்களைக் குறிப்பிட்டு, கட்சியை தி.மு.கவோடு இணைத்து விடலாம் என ஆவேச கடிதம் ஒன்றை எழுதியிருக்கிறார் அக்கட்சியின் அவை தலைவரான துரைசாமி. ம.தி.மு.கவிற்குள் என்னதான் நடக்கிறது?

கடந்த ஏப்ரல் 27ஆம் தேதி ம.தி.மு.கவின் அவைத் தலைவர்களில் ஒருவரான சு. துரைசாமி மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் பொதுச் செயலாளரான வைகோவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அந்த கடிதத்தில் பல்வேறு குற்றச்சாட்டுகளை சுமத்தி கேள்விகளை எழுப்பியிருந்தார் துரைசாமி.

ஏழு பக்கங்களில் எழுதப்பட்டிருந்த அந்த கடிதத்தில் பின்வரும் குற்றச்சாட்டுகளை அவர் எழுப்பியிருந்தார்.

'1993ல் ம.தி.மு.க துவங்கப்பட்டபோது அதன் நிர்வாகிகளாகப் பொறுப்பு வகித்தவர்கள் தாங்கள் அரசியலுக்கு வருவதற்கு முன்பே தி.மு.கவில் பொறுப்புகளை வகித்து, தி.மு.கவை வளர்த்தவர்கள். வாரிசு அரசியலுக்கு எதிரான தங்களது உணர்ச்சிமிகு உரைகளைக் கேட்டே, லட்சக்கணக்கான தோழர்கள் தங்களது பேச்சில் உறுதியிருக்கும், உண்மையிருக்கும் என்று நம்பி தங்களை ஆதரித்தனர்.

ஆனால், தங்களின் குழப்ப அரசியல் நிலைப்பாடு காரணமாக, பெருவாரியான முன்னணித் தலைவர்களும் தோழர்களும் தி.மு.கவிற்கே சென்று விட்டனர்.

ஏப்ரல் 16ஆம் தேதி குளித்தலையில் திருமண நிகழ்ச்சியில் பேசிய நீங்கள், 'கட்சியின் அவைத் தலைவர் பொறுப்பில் இருந்தவரும் இன்னும் முக்கிய பொறுப்புகளில் இருந்த நான்கைந்து பேரும் சேர்ந்து கட்சிக்குள் குழப்பத்தை ஏற்படுத்தலாம், கட்சியை உடைத்து விடலாம் என்று முயற்சித்தார்கள்" என களங்கப்படுத்தும் நோக்கத்துடன் மீண்டும் பேசியுள்ளீர்கள்.

ஈரோடு மற்றும் திருப்பூர் வார்டுகளில் போலியான பெயர்களில் உறுப்பினர்களைப் பதிவு செய்து, உள்கட்சி தேர்தல்களை நடத்தி முடித்துள்ளீர்கள். கொங்கு மண்டலத்திலேயே ம.தி.மு.கவின் நிலை இதுவென்றால் வேறு மாவட்டங்களைப் பற்றிச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

கடந்த இரண்டு ஆண்டுகளாக ம.தி.மு.கவில் நடைபெறும் சம்பவங்களால் வெட்கப்படவும் வேதனைப்படவும் வேண்டியுள்ளது.

கழகத்தின் கள நிலவர செல்வாக்கு முற்றிலும் சரிந்த நிலையில், நாடாளுமன்ற தேர்தலில் தி.மு.க. தலைமை ம.தி.முகவுக்கு எத்தனை இடங்கள் ஒதுக்குவார்கள் என்று தெரியாத நிலையில் விருதுநகர் மாவட்ட கழகம் விருதுநகர் நாடாளுமன்ற தொகுதியில் ஒருவர் பெயரை குறிப்பிட்டு, போட்டியே வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றி பத்திரிகைக்கு செய்தி வெளியிடுவதும் அவரே திருச்சி நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிட வேண்டுமென திருச்சி மாவட்டக் கழகத் தோழர்களிடம் சொல்லி தீர்மானம் நிறைவேற்றி பத்திரிகைகளில் செய்தி வெளியிடுவதும் இதேபோல திண்டுக்கல் நாடாளுமன்ற தொகுதியிலும் செய்வதும் தான் அரசியல் நேர்மையா?

எந்தக் குடும்ப அரசியலுக்கு எதிராக தொண்டர்களை தூண்டினீர்களோ அன்று ஒரு நிலைப்பாடும் இன்று அதற்கு முற்றிலும் மாறுபட்ட நிலைப்பாட்டை எடுப்பதும் மகனை ஆதரித்து அரவணைப்பதும் தங்களது சந்தர்ப்பவாத அரசியலையும் பொது வெளியில் கழகத்தைப் பார்த்து மக்கள் எள்ளி நகையாட வைத்துவிட்டது என்பதையும் தாங்கள் அறியாமல் இருப்பது வருந்தத்தக்க வேதனையான நிகழ்வு.

தமிழ்நாட்டில் எனக்குத் தெரிந்து எந்த அரசியல் கட்சியும் இப்படி பதவி கேட்டு தீர்மானங்களை நிறைவேற்றியதில்லை. இப்படிப்பட்ட நடவடிக்கைகள் தங்கள் குடும்ப மறுமலர்ச்சிக்குத்தான் என்பதை தங்களின் செயல்பாடு வெளிச்சம்போட்டுக் காட்டுகிறது.

கடந்த முப்பது ஆண்டுகளாக தங்களது உணர்ச்சிமிக்க பேச்சை நம்பி வாழ்க்கையை இழந்த தோழர்களை மேலும் மேலும் ஏமாற்றம் அடைய செய்யாமல் இருக்க, கழகத்தை தாய்க் கழகமான தி.மு.கவுடன் இணைத்துவிடுவதுதான் சமகால அரசியலுக்குச் சாலச் சிறந்தது" என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

வைகோவின் மகன் துரை வையாபுரி ம.தி.மு.கவில் கட்சிப் பதவிக்குக் கொண்டுவரப்படுவதை ஆரம்பம் முதலே எதிர்த்து வருகிறார் துரைசாமி. 2021 அக்டோபரில் துரை வையாபுரி தலைமைக் கழகச் செயலர் பதவிக்குக் கொண்டுவரப்படுவதை அவர் எதிர்த்தார்.

"கட்சிக்குள் வாரிசு அரசியலை ஊக்குவிக்க வேண்டாம் என ஒன்றரை மணிநேரம் வைகோவிடம் பேசினேன், அவர் கேட்கவில்லை," என்று அந்த சமயத்தில் தெரிவித்தார் துரைசாமி.

### நிராகரித்த வைகோ, ஆதங்கப்படும் துரைசாமி

திங்கட்கிழமையன்று செய்தியாளர்களைச் சந்தித்த



வைகோவிடம், துரைசாமி அனுப்பிய கடிதம் குறித்துக் கேள்வி எழுப்பியபோது, "துரைசாமி அனுப்பிய கடிதத்தை கட்சியின் பொதுச் செயலாளராக நான் அலட்சியப்படுத்துகிறேன். இரண்டு வருடங்களாக கட்சிக்கு வராமல் இருந்துவிட்டு, தற்போது அறிக்கை வெளியிட்டு இருக்கிறார். இனிமேல் அவரின் பேச்சுக்கு நான் முக்கியத்துவம் கொடுக்க மாட்டேன்" என்று மட்டும் தெரிவித்தார்.

கட்சிக் கூட்டங்களுக்கு வராமலேயே இதுபோல கடிதங்கள் எழுதுவதாக வைகோ கூறுவது குறித்து அவைத் தலைவர் துரைசாமியிடம் கேட்டபோது, "ஏதாவது கூட்டத்தைக் கூட்டினால்தானே வர முடியும். தவிர, ஒரு கூட்டத்தைக் கூட்டுவதற்கு முன்பாக அவைத் தலைவரிடம் கலந்தாலோசனை செய்ய வேண்டும்.

கடந்த இரண்டாண்டுகளில் அப்படி ஒரு போதும் கேட்டது கிடையாது. கடைசியாக நடந்த மாவட்டச் செயலாளர் கூட்டத்திற்கு, என் பெயரைப் போடாமல் வாட்ஸப்பில் அழைப்பிதழ் அனுப்பினார். சிலர் எதிர்ப்பு தெரிவித்த பிறகு துரைசாமி தலைமையில் கூட்டம் நடக்கும் என மறுபடியும் அழைப்பிதழ் அனுப்பினார்.

அந்தக் கூட்டத்திற்கு நான் வர மாட்டேன் என்று நினைத்தார். ஆனால், நானும் கணேசமூர்த்தியும் வந்து விருந்தினர் மாளிகையில் தங்கியிருந்தோம். கணேசமூர்த்தியிடம் பேசிய வைகோ, கூட்டத்தில் கலந்துகொண்டால், உறுப்பினர் சேர்க்கை தவிர வேறு எதையும் பேச வேண்டாம் என்று சொல்லுங்கள் என்றார்.

நான் கூட்டத்திற்குப் போனபோது, பிரதான வாசல் கதவை மூடிவிட்டார்கள். காரிலிருந்து இறங்கி நடந்து வாருங்கள் என்றார்கள். பிறகு நான் திரும்பிச் சென்றுவிட்டேன். பிறகு வைகோவே போன் செய்து அழைத்தார். பிறகு போய் கலந்துகொண்டேன்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் எத்தனை மாவட்டக் கழகக் கூட்டங்கள் கூட்டப்பட்டுள்ளன? மாவட்ட செயலாளர் கூட்டமோ, ஊழியர் கூட்டமோ நடந்திருக்கிறதா? ஒன்றும் நடக்கவில்லை. அதைத்தான் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறேன்" என்று தனது கடிதத்திற்கு பின்னால் உள்ள காரணங்களை விவரித்தார்.

துரை வையாபுரிக்கு கட்சியில் பதவி கொடுக்கப்பட்டதுதான் உங்கள் அதிருப் திக்குக் காரணமா என்று கேட்டபோது, '2021லேயே வைகோவிடம் சொல்லிவிட் டேன். வாரிசு அரசியலை எதிர்த்து கட்சியை ஆரம்பித்துவிட்டு, மகனுக்கு பதவி கொடுத்தால் கெட்ட பெயர் வரும் என்று சொன்னேன். கேட்கவில்லை" என்று முடித் துக்கொண்டார் துரைசாமி.

### ம.தி.மு.கவின் எதிர்காலம் என்ன?

ம.தி.மு.கவைப் பொறுத்தவரை கடந்த பத்தாண்டுகளில் தேர்தல் அரசியலில் பெரும் சரிவைச் சந்தித்திருக்கிறது. 2019 ஆம் ஆண்டில் தி.மு.க. கூட்டணியில் நாடாளுமன்ற தேர்தலைச் சந்தித்த ம.தி.மு.க. ஒரு மக்களவைத் தொகுதியையும் ஒரு மாநிலங்களவைத் தொகுதியையும் பெற்றது. 2021 சட்டமன்றத் தேர்தலில் 6 தொகுதிகளில் போட்டியிட்டு 4 தொகுதிகளைப் பெற்றது. ஆனால், தி.மு.கவின் உதய சூரியன் சின்னத்திலேயே இந்த வெற்றிகளைப் பெற்றிருக்கிறது.

இந்த நிலையில்தான் கட்சியை தி.மு.கவுடன் இணைக்க வேண்டும் எனப் பேசியிருக்கிறார் துரைசாமி. "இனிமேல் ம.தி.மு.கவுக்கு எதிர்காலம் கிடையாது. கட்சியை தி.மு.கவில் இணைத்துவிட்டால் மீதமுள்ள தொண்டர்களாவது அவரவர் சக்திக்கு ஏதாவது செய்வார்கள். அவர்களது அரசியல் வாழ்க்கை பாழாகாமல் இருக்கும்" என கூறினார் துரைசாமி.

ஆனால், வைகோ இந்தக் கருத்தை நிராகரித்திருக்கிறார். "ம.தி.மு.கவை தி.மு.கவுடன் இணைக்கும் நோக்கம் எங்களுக்கு இல்லை. ம.தி.மு.க. 30 வருடங்களாக தனித்தே இயங்குகிறது் இனியும் தனித்தே இயங்கும்" என்கிறார் வைகோ.

"வைகோ இரண்டு விஷயங்களுக்காக கட்சியை ஆரம்பித்தார். தி.மு.கவில் இருந்த வாரிசு அரசியலுக்கு எதிர்ப்பு ஒரு காரணம். அவரைத் தி.மு.கவில் ஒதுக்க ஆரம்பித்தது இரண்டாவது காரணம். ஆனால், ம.தி.மு.கவைப் பொறுத்தவரை முதல் தேர்தலில் இருந்தே சறுக்கல்தான். கடந்த பத்தாண்டுகளாக தி.மு.கவை எதிர்த்தவர், 2019க்குப் பிறகு தி.மு.கவை ஆதரிக்க ஆரம்பித்தார். இந்த பத்து ஆண்டுகளில் அவரது வாக்கு வங்கி வெகுவாகச் சரிந்துவிட்டது.

ஆனால், இதையெல்லாம் விட பெரிய பிரச்சனை கட்சியை எதற்காக ஆரம்பித்தாரோ, அந்த அடிப்படை நோக்கத்திலிருந்து மாறுபட்டதுதான். அதனால்தான், துரைசாமி போன்றவர்கள் கட்சியை தி.மு.கவுடன் இணைத்து விடலாம் என்கிறார்கள்.

தவிர, தற்போதைய சூழலில் தி.மு.கவிற்கும் ம.தி.மு.கவிற்கும் கொள்கை ரீதியாக பெரிய வித்தியாசம் கிடையாது. தனித்து இயங்குவதற்குமான தேவையும் கிடையாது. ஆகவே, தி.மு.கவுடன் இணைப்பதுதான் சரி. ஆனால், அதை வைகோ ஏற்க மாட்டார்.

கட்சி என்பது வெறும் கட்சி அல்ல. அதற்கு சொத்துகள் உள்ளன. தனி கட்சி நடத்துவதில் சில ஆதாயங்கள் இருக்கின்றன. அது தனக்குப் பிறகு தன் மகனுக்குக் கிடைக்க வேண்டுமென நினைக்கிறார் வைகோ. என்பதுதான் பிரச்சனை" என்கிறார் மூத்த பத்திரிகையாளரான ப்ரியன்.

### ம.தி.மு.கவின் தோற்றமும் தேய்வும்

தி.மு.கவின் முக்கியத் தலைவர்களில் ஒருவராக விளங்கிய வைகோ, 1964ஆம் ஆண்டு அண்ணா இருக்கும் காலத்திலேயே அரசியலில் இறங்கியவர். தொடர்ந்து தி.மு.கவில் செயல்பட்ட வைகோ, 80களின் இறுதியிலும் 90களின் துவக்கத்திலும் மிகப் பிரபலமான ஒரு தலைவராக இருந்தார்.

1992ஆம் ஆண்டில், புலிகள் உதவியுடன் வைகோ தன்னைக் கொலை செய்ய முயற்சிக்கலாம் என தனக்குத் தகவல் வந்ததாக தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறினார். இதையடுத்து இருவருக்கும் இடையிலான மோதல் முற்றியதில், தி.மு.கவிலிருந்து வெளியேறிய வைகோ மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தைத் துவங்கினார்.

மதுவிலக்கிற்கான போராட்டம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சீமை கருவேல மரங்கள் ஒழிப்பு, முல்லைப் பெரியாறு பிரச்சினை, மீத்தேன் எடுப்பதற்கு எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட பல போராட்டங்களை நடத்தியிருக்கிறார்.

புலிகள் இயக்கத்திற்கு ஆதரவாகப் பேசியதால் 2001ல் கைதுசெய்யப்பட்டு 19 மாதங்கள் சிறையில் இருந்தார் வைகோ. ஆனால், அவரது போராட்டங்கள் எதுவும் தேர்தல் ரீதியாக பெரும் வெற்றிகளை ம.தி.மு.க பெற்றுத்தரவில்லை.

2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் இருந்து, தி.மு.க. கூட்டணியில் ம.தி.மு.க. இடம்பெற்றுள்ளது. வைகோ தற்போது நாடாளுமன்ற மக்களவை உறுப்பினராகவும் இருந்து வருகிறார்.

வைகோவின் உடல்நிலை நலிவடைந்த நிலையில், அவருடைய மகன் துரை வையாபுரியை அரசியலுக்கு அழைத்துவர வேண்டுமென நிர்வாகிகளின் ஒரு பகுதியினர் கோரிய நிலையில், 2021ஆம் ஆண்டு அக்டோபரில் துரை வையாபுரி, ம.தி.மு.கவின் தலைமை கழக செயலராக நியமிக்கப்பட்டார். இதற்கு ஒரு பகுதி நிர்வாகிகள் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்துவந்தனர்.

2024ல் நடக்கவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் துரை வையாபுரி விருதுநகர் தொகுதியில் போட்டியிடலாம் என எதிர்பார்க்கப்படும் நிலையில், அதற்காக பல மாவட்டங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுவருகின்றன.

ஈழநாடு



# மாகாண சபை தேர்தல்கள் மூலமாக மக்களின் மனநிலையை அறிந்துபார்த்தல்

எரிபொருட்களின் விலைகளில் இரண்டாவது சுற்றுக் குறைப்பு ( சாதாரண பெற்றோலுக்கு 2 சதவீதம், ஆடம்பர வாகனங்களுக்கு பயன்படுத்தப்படும் சூப்பர் டீசலுக்கு 29 சதவீதம்) சனத்தொகையில் வசதிபடைத்த பிரிவினர் மத்தியில் அதன் ஆதரவுத்தளத்தை மேம்படுத்துவதில் அரசாங்கம் நாட்டம் கொண்டிருப்பதன் ஒரு அறிகுறி. வசதிபடைத்த பிரிவினர் அபிப்பிராயத்தை உருவாக்குவதில் முக்கியமானவர்கள் என்ற நம்பிக்கையில் தேர்தல்களை நடத்தும் எதிர்பார்ப்பில் மக்கள் மத்தியில் மனநிலை மாற்றத்தை தோற்றுவிப்பது இதன் நோக்கமாக இருக்கக்கூடும்.

காலம் கடந்துவிட்ட உள்ளூராட்சி தேர்தல்களை நடத்தவேண்டும் என்ற கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. 300 க்கும் அதிகமான சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்ட மின் கட்டணங்கள் மாத்திரமல்ல பாடசாலைச் சிறார்களின் பாடப்புத்தகங்களின் விலைகளில் 200 க்கும் அதிகமான சதவீதத்தினால் ஏற்பட்டிருக்கும் அதிகரிப்பு போன்று பெருமளவு விலை அதிகரிப்புகளின் உள்ளூர் மட்டத்தில் மக்கள் பெரிதும் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது அரசாங்கத்துக்கு நன்றாக தெரியும். ஆனால் தேர்தல்கள் ஊடாக மக்களின் ஆணையைப் பெறுவது நியாயப்பாட்டுக்கான ஒரு ஆதாரமாகும். அரசாங்கம் அதன் இருப்பை நியாயப்படுத்துவதையும் மக்களின் சார்பில் தீர்மானங்களை எடுப்பதையும் அது இயலுமாக்கும்.

தற்போதைய காலகட்டத்தில் குறிப்பாக வங்குரோத்து நிலை பிரகடனப்படுத்தப்பட்டதன் பின்னரான சூழ்நிலையில் உலகுடன் வழமையான வாணிப உறவுகளை மீள ஏற்படுத்திக் கொள்வதற்காக கடினமானதும் சர்ச்சைக்குரியதுமான பல தீர்மானங்களை எடுக்கவேண்டியிருக்கிறது. அரசாங்கம் அதன் வெளிநாட்டுக்கடன்களை திருப்பிச் செலுத்துவதை கடந்த வருடம் ஏப்ரில் மாதத்தில் நிறுத்திக்கொண்டது. கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கு அரசாங்கத்திடம் சர்வதேச நாணயக் கையிருப்பு இருக்கவில்லை.

வங்குரோத்து நிலையைப் பிரகடனம் செய்த நாடொன்று கடன்களை திருப்பிச் செலுத்துவதை தாமதிப்பதற்கும் அந்த கடன் பணத்தில் கழிவொன்றை பெறுவதற்கும் சர்வதேச கடன்வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதே சர்வதேச நடைமுறையாகும். இந்த கடன் வழங்குனர்களுடனான மீட்சி செயன்முறைக்கு சர்வதேச நாணய நிதியம் ஆதரவளித்து வருகிறது. அதேபோன்றே அரசாங்கத்தின் பிணை முறிகளையும் திறைசேரி உண்டியல்களையும் வைத்திருக்கும் உள்நாட்டுக் கடன் வழங்குநர்கள், உள்நாட்டு வங்கிகள் மற்றும் நிறுவனங்களுடனும் கடன் மறுசீரமைப்புக்கு அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை நடத்தவேண்டியிருக்கிறது. இந்த உள்நாட்டு கடன்வழங்குநர்கள் மற்றும் நிறுவனங்களில் சில தொழிலாளர்களின் சேமிப்புக்களை வைத்திருக்கின்றன. இந்த சேமிப்புக்களை தவிர தொழிலாளர்களுக்கு அவர்களது ஓய்வு காலத்தில் பணத்தக்கான வேறு ஆதாரம் எதுவும் இல்லை.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதை அரசாங்கம் தற்காலகமாக ஒத்திவைத்திருக்கிறது.

அடிப்படை வருமானத்தில் இழப்புக்கு மேலதிகமாக சேமிப்புக்களிலும் இழப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலையில் தொழிலாளர் வர்க்கத்தின் வேலைநிறுத்தங்களும் மக்கள் போராட்டங்களும் முழு வீச்சில் முன்னெடுக்கப்படக்கூடும் என்று அரசாங்கத்துக்கு இருக்கும் அச்சத்துடன்




தொடர்புபட்டதாக இந்த ஒத்திவைப்பு இருக்கக்கூடும்.

பெரிய தனவந்த சர்வதேச கடன் வழங்குனர்களிடம் கழிவைப் பெறுவதைப் போன்று அரசாங்கம் உழைக்கும் மக்களின் சேமிப்புக்களையும் கழிவுக்கு உட்படுத்தினால் அவர்கள் வீதிகளில் இறங்கி போராட்டங்களில் இறங்கக்கூடிய சாத்தியம் இருக்கிறது. பயங்கரவாத தடைச்சட்டத்தை பதிலீடு செய்வதற்கு அரசாங்கம் கொண்டுவர முயற்சிக்கும் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் தொழிற்சங்க நடவடிக்கைகளையும் பயங்கரவாத செயல்கள் என்று வியாக்கியானப் படுத்தக்கூடியதாக விசாலமான வீச்செல்லையை கொண்டதாக இருக்கிறது. அதற்கு கடுமையான எதிர்ப்பு கிளம்பியிருக்கிறது. ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகைகளை மறுபரிசீலனை செய்யவேண்டிவரும் என்று ஐரோப்பிய ஒன்றியம் அரசாங்கத்தை எச்சரிக்கை செய்திருக்கிறது. தற்போதைய நெருக்கடியான தருணத்தில் அந்த வரிச்சலுகையை இழந்தால் இலங்கைக்கு பெரிய பாதிப்பு ஏற்படும்.

### இரு தெரிவுகள்

தேர்தல்களை நடத்துவதைப் பொறுத்தவரை, அரசாங்கம் அதிகாரத்தின் மீதான அதன் பிடிக்கு பாதிப்பு ஏற்படாத முறையில் ஓரளவு நியாயப்பாட்டைப் பெறுவதற்கு வகைசெய்யக்கூடிய இரு தெரிவுகள் அதற்கு இருக்கின்றன. பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய பொதுத்தேர்தலுக்கு உத்தரவிடுவதற்கான சட்ட அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கிறது. ஆனால் ஆளும் கட்சி பெரும்பான்மைப் பலத்தைப் பெறாவிட்டால் அரசாங்கம் அதிகாரத்தை இழக்கும். அத்துடன் பாராளுமன்றத்தில் புதிய பெரும்பான்மைக் கட்சி ஜனாதிபதிக்கு விரோதமானதாக இருக்கும் பட்சத்தில் ஜனாதிபதியும் தனது அதிகாரத்தை இழக்கவேண்டியேற்படும்.

மறுபுறத்தில் , உள்ளூராட்சி தேர்தல்களையோ அல்லது மாகாணசபை தேர்தர்களையோ நடத்துவது அரசாங்கத்தின் அதிகாரத்துக்கு நேரடியான அச்சுறுத்தலாக அமையப்போவதில்லை. இந்த இரு தேர்தல்களும் நீண்டகாலமாக நடத்தப்படாமல் இருக்கின்றன. பணம் இல்லை என்பதே உள்ளூராட்சி தேர்தல்களை நடத்தாமல் இருப்பதற்கு அரசாங்கம் கூறும் சாக்குப்போக்காகும். எரிபொருட்களின் விலைகளில் அரசாங்கம் செய்யும் குறைப்பை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது இது நம்பமுடியாதது.

“அரசாங்கம் எந்த வடிவிலானதாக இருக்கவேண்டும் என்று முட்டாள்கள் வேண்டுமானால் சண்டை பிடிக்ககூடும். எது சிறப்பாக நிருவகிக்கப்படுகிறதோ அதுவே சிறந்த அரசாங்க வடிவம்” என்ற 18 ஆம் நூற்றாண்டின் ஆங்கில அரசியல் விமர்சகர் அலக்சாண்டர் போப்பின் வார்த்தைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தின் கீழ் அரசாங்கம் மனதிற்கு எடுத்திருக்கிறது போன்று தெரிகிறது. நாட்டை வழிநடத்துவதில் ஜனாதிபதி விக்கிரமசிங்க தற்போது வழங்குகின்ற தலைமத்துவம் அவரின் அரசியல் எதிரிகள் உட்பட சமூகத்தில் பலரால் நேர்மறையாக நோக்கப்படுகிறது. ஜனாதிபதி அவர் எதிர்நோக்குகின்ற சவாலகளுக்கு மத்தியில் உத்வேகமாக மேம்படுகிறார் போன்று தெரிகிறது.

ஒரு வருடத்துக்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நாட்டை விட்டு வெளியேறியபோது காணப்பட்ட குழப்பகரமான நிலைமையை முடிவுக்கு கொண்டுவருவதற்கு, பாராளுமன்றத்தினால் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட உடனடியாகவே விக்கிரமசிங்க வழங்கிய பங்களிப்புக்கு ஒரு அங்கீகாரம் இருக்கிறது. நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைக்கு காரணமான அதே அரசாங்க நிருவாக ஒழுங்கே மீண்டும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற போதிலும் அமைதியான சூழல் நிலவுகிறது என்ற ஒரு உணர்வு இன்று காணப்படுகிறது. உயர்மட்ட ஊழலுக்காக குற்றஞ்சாட்டப்பட்டு பொறுப்புக் கூறாமல் இருக்கும் ஆட்களே வாக்குவங்கிகளை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதால் நடைமுறைச்சாத்தியமான முறையில் அரசாங்க நிருவாகத்தை முன்னெடுப்பற்கு சமாளித்து நடக்கவேண்டியிருந்தாலும் கூட அவர்கள் அரசாங்கத்தில் தொடருவது தார்மீக அடிப்படையில் அனுமதிக்கக்கூடியதல்ல.

ஜனாதிபதியின் மதிப்பு உயர்வானதாக காணப்படும் தற்போதைய தருணமே தேர்தல் ஒன்றில் வெற்றி பெறுவதற்கு சிறந்த வாய்ப்பு என்று அவர் (அவரின் ஆலோசகர்கள் குழுவும்) நம்புவதாக செய்திகள் வருகின்றன. ஆனால், உரிய காலத்துக்கு முன்கூட்டியே ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு அரசியலமைப்பு அவரை அனுமதிக்கவில்லை. மக்களினால் தெரிவு செய்யப்படும் ஒரு ஜனாதிபதி மாத்திரமே முன்கூட்டியே தேர்தலை நடத்தமுடியும் என்று அரசியலமைப்பு கூறுகிறது.

பதவி விலகும் ஜனாதிபதியின் இடத்துக்கு பாராளுமன்றத்தினால் தெரிவாகும் ஜனாதிபதியொருவர் முன்னையவரின் எஞ்சிய பதவிக்காலத்தை நிறைவு செய்ய வேண்டும். விக்கிரமசிங்க முன்கூட்டியே ஜனாதிபதி தேர்தலை நடத்த விரும்பினால் அரசியலமைப்புக்கு திருத்தம் ஒன்றைக் கொண்டுவரவேண்டும். அதற்கு அவருக்கு எதிர்க்கட்சிகளின் ஆதரவு தேவை. அடுத்த ஜனாதிபதி தேர்தலை தான் விரும்புகிற ஒருநேரத்தில் ஜனாதிபதி நடத்துவதை எதிர்க்கட்சிகள் விரும்புமா என்பது ஒரு கேள்வி.

### மாகாணசபை தேர்தல்கள்

இத்தகைய சூழ்நிலைகளில், மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கம் உத்தேசிக்கிறது போன்று தெரிகிறது. மாகாணசபை தேர்தல்கள் நான்கு வருடங்களாக நடத்தப்படாமல் இருக்கின்றன. மாகாணசபை தேர்தல்கள் தொடர்பான சட்டம் ஒன்று காரணமாகவே அவை ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன. அந்த சட்டத்தை மீளாய்வு செய்யும் செயன்முறைக்கு அரசியல் கட்சிகள் மத்தியில் கருத்தொருமிப்பு இல்லை என்று கூறப்படுகிறது.

ஆனால் சட்டத்தை மாற்றவேண் டும் என்று அரசாங்கம் விரும்பினால் அதைச் செய்வதற்கு அதனிடம் பாராளுமன்ற பெரும்பான்மை பலம் இருக்கிறது. மாகாணசபை தேர்தல்களின் தேசிய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் காரணமாக அவற்றை நடத்துவதை எதிர்க்கட்சிகளும் எதிர்ப்பது சாத்தியமில்லை.



கலாநிதி ஜெகான் பெரேரா

இந்திய அரசாங்கத்தின் ஆதரவுடன் இனநெருக்கடிக்கு ஒரு தீர்வாக 1987 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டவையே மாகாணசபைகள். இந்தியாவை ஐக்கியப்பட்டதும் பெருமளவுக்கு அமைதியானதாகவும் வைத்திருப்பதில் வெற்றிகண்ட அதிகாரம் பரவலாக்கப்பட்ட இந்திய அரசாங்க முறைமையை (**Indian system of devolved government**) மாதிரியாகக் கொண்டு அமைந்ததே மாகாணசபை முறைமை. ஆனால் இலங்கையில் போர் என்ற கண்ணாடி வில்லையின் ஊடாகவே அந்த முறைமை நோக்கப்படுகிறது. போரை முடிவுக்கு கொண்டுவருவதை நோக்கமாகக் கொண்ட மாகாணசபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டபேது போர் தொடர்ந்துகொண்டிருந்தது.

அதன் விளைவாக மாகாணசபைகளுக்கு போதிய நிதி வளங்களோ அதிகாரங்களோ கொடுக்கப்படாமல் அது ஒரு கேலிக்குள்ளாக்கப்பட்டது. நான்கு வருடங்களாக மாகாணசபை தேர்தல்களை நடத்தாமல் அவற்றை ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்ற ஆளுநர்களின் நிருவாகத்தில் வைத்திருப்பது மிகவும் மோசமான அவமதிப்பாகும். இந்த ஆளுநர்களில் சிலர் மக்களுடன் எந்த நெருக்கமும் இல்லாதவர்களாக காணப்படுகிறார்கள்.

இந்த நேரத்தில் மாகாணசபை தேர்தல்களை நடத்துவது நாட்டில் ஜனநாயக மற்றும் நல்லிணக்க செயன்முறைகளை பலப்படுத்துவதற்கு ஒரு நேர்மறையான தொடக்கமாக அமையமுடியும். நாட்டின் ஆட்சிமுறையில் தங்களுக்கு பயனுறுதியுடைய முறையில் பங்கு இல்லை என்று விளங்கிக்கொண்ட தமிழ் மக்கள் தாங்கள் அன்னியப்படுத்தப்படுவதாக உணர்ந்த காரணத்தினாலேயே இன நெருக்கடி மூன்று தசாப்த காலம் நீடித்த போராக மாறியது.

தேர்தல் அரசியலைப் பொறுத்தவரை தனது தேசியவாதமற்றதும் இனவெறியற்றதுமான அணுகுமுறைகளுக்காக விக்கிரமசிங்க பெரிதும் மதிக்கப்பட்டு வந்திருக்கிறார். நாட்டின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு இந்த வருடத்தில் இணக்கப்பாடொன்றை எட்டுவதற்கு எதிர்பார்த்திருப்பதாக இறுதியாக அவர் அறிவித்திருக்கிறார். மாகாணசபை முறையை மீண்டும் செயற்படவைப்பது நல்லிணக்கத்துக்கான ஒரு செய்தியாகவும் முன்னெடுக்கின்ற பாதை குறித்து அரசாங்கம் மக்களுடன் கலந்தாலோசிக்கத் தயாராயிருப்பதன் அறிகுறியாகவும் அமைய முடியும். போர்க்கால குற்றங்களுக்காகவும் தவறான பொருளாதார முகாமைத்துவத்துக்காகவும் சம்பந்தப்பட்டவர்கள் பொறுப்புக் கூறவைக்கப்பட வேண்டும் என்று மக்கள் கோருகிறார்கள். அது குறித்து அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டிய தேவை இருக்கிறது.

# ஒற்றுமையாக சகலரும் சேர்ந்து தீர்வை பெற போராடவேண்டும்

## கல்முனை வர்த்தக சங்கச் செயலாளர் அழைப்பு

கல்முனை, மே. 03

“தொழிலாளர் தினத்தை ஏனைய நாடுகள் மிக விமரிசையாக கொண்டாடிக்கொண்டு இருக்கின்ற நிலையில், எங்கள் நாட்டில் உள்ள ஊழியர்கள் மிகவும் வறுமையில் உள்ளார்கள். எனவே, நாட்டின் தற்போதைய அசாதாரண சூழலைக் கருத்தில் கொண்டு, ஒற்றுமையாக அனைவரும் தீர்வொன்றை பெற போராடவேண்டும்” என கல்முனை பொதுச்சந்தை வர்த்தக சங்கச் செயலாளர் ஏ.எல். கபீர் தெரிவித்தார்.

அம்பாறை - கல்முனை பொதுச்சந்தை வர்த்தக சங்க அலுவலகத்தில்நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச தொழிலாளர் தினத்தை தற்போது உலகம் பூராகவும் அனுஷ்டிக்கின்ற நிலையில், எமது நாட்டின் உள்ள நிலைமையினால் அத்தினத்தை மிக விமர்சையாக கொண்டாட முடியாததால் நாம் கவலை அடைகின்றோம். அந்த வகையில் எமது நாட்டின் பொருளாதார சிக்கல்களுக்கு மத்தியில் இந்த ஊழியர் தினத்தை அனுஷ்டிக்கின்ற துர்ப்பாக்கிய நிலைக்கு இந்த நாட்டு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நாட்டில் உள்ள ஊழியர்களின் நலனில் அக்கறை கொள்ளவேண்டும். தற்போதைய வாழ்க்கை செலவு ஊழியர்கள் மத்தியில் சிரமங்களை கொடுக்கின்றது.

கல்முனை பொதுச் சந்தையானது குறைந்த ஊழியர்களை கொண்டு சிறப்பாக இயங்கிய ஒரு சந்தையாகும்.

நாட்டின் ஊழியர்களின் நிலைமைகளை கவனத்தில் கொண்டு இந்த நாட்டில் உள்ள சகல பொருளாதார பிரச்னைகளை சீர்செய்ய இணைந்து தீர்வொன்றினை பெற்றுத்தர வேண்டும் என கல்முனை பொதுச்சந்தையில் இருந்து மிக வினயமாக கேட்டுக்கொள்கின்றோம்.

எமது சகோதரர்கள் போன்று அவ்வூழியர்களை நாங்கள் பார்த்துக்கொண்டு இருக்கின்றோம். இந்த ஒற்றுமையான நிலைமையை கல்முனை பொதுச் சந்தையில் மட்டுமல்லாது, நாடு பூராகவும் இவ்வாறான ஒற்றுமை நிலவ வேண்டும் என இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மேலும், அனைத்து ஊழியர்களும் நிம்மதியாக வாழ அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டு கோள் விடுக்கின்றேன்-என்றார். (அ)

# பயங்கரவாத சட்டத்தை இரத்து செய்து ஜனநாயகத்தை பாதுகாக்க வேண்டும்!

## உதய கம்மன்பில சொல்கிறார்

கொழும்பு, மே 03

நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டம் இரத்து செய்யப்பட்டு ஜனநாயகம், அடிப்படை உரிமைகள் ஆகியவற்றை பாதுகாக்கும் வகையில் தேசிய பாதுகாப்பு சட்டம் உருவாக்கப்பட வேண்டும். வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் முழுமையாக நீக்கப்பட வேண்டும். இந்த சட்டமூலத்துக்கு எதிரான போராட்டங்களை ஒன்றிணைப்போம் என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

நேற்று அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டம் முழுமையாக இரத்து செய்யப்பட்டு ஜனநாயகம், அடிப்படை உரிமைகள் ஆகிய அம்சங்களை பாதுகாக்கும் வகையில் தேசிய பாதுகாப்பு சட்டம் உருவாக்கப்பட வேண்டும். வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தில் பெரும்பாலான ஏற்பாடுகளை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் அரசாங்கத்தின்



கொள்கைகளை விமர்சிக்கும் எதிர்க்கட்சிகள், அரசாங்கத்தின் குறைகளை சுட்டிக்காட்டும் ஊடகங்கள், ஊடகவிளலாளர்கள், தொழிற்சங்கத்தினர் அனைவரும் பயங்கரவாதிகளாக சித்திரிக்கப்படுவார்கள்.

ஜனநாயக நாட்டில் எதிர்க்கட்சிகளின் பேச்சுரிமை முடக்கும் வகையில் சட்டங்கள் இயற்றப்பட்டால் சர்வாதிகாரத்தை மாத்திரம் முன்னிலைப் படுத்தி அரசாங்கம் செயற்படும். ஜனநாயகம் பேச்சளவில் மாத்திரமே செயற்படுத்தப் படும். ஒரு நபரின் வன்முறையான செயற்பாட்டை ஊடகங்கள் வெளியிடும்போது அதனை அரசாங்கம் பயங்கரவாதமாக கருதுமாயின் அந்த செய்தியை வெளியிட்ட ஊடகத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் அரசாங்கத்துக்கு இந்த சட்டமூலத்தின் ஊடாக வழங்கபட்டுள்ளது.

நாட்டில் உள்ள சகல அரச நிறுவனங்களும் தங்களின் தொழில் உரிமைகளுக்காக போராடுகிறார்கள்.தொழிற்துறையில் பாரிய குறைப்பாடுகள் காணப்படுவதால்தான் தொழிற்சங்கத்தினர் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் அரச சேவையாளர்கள் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட முடியாது. ஜனாதிபதி எந்த சேவையையும் அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்த முடியும். அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்பட்ட ஒரு சேவைக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் பயங்கரவாதிகளாக அடையாளப் படுத்தப்படுவார்கள்.

சட்டமூலத்தின் 82 ஆவது உறுப்புரையில் ஜனாதிபதி தான் விரும்பும் அமைப்புக்களை தடை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் கொள்கைகளை விமர்சிக்கும் அமைப்புக்களை ஜனாதிபதியால் தடைசெய்ய முடியும். ஆகவே உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் ஜனநாயகத்துக்கு முற்றிலும் விரோதமானது. நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டம் இரத்து செய்யப்பட்டு, ஜனநாயகம் மற்றும் அடிப்படை உரிமைகள் ஆகியவற்றை பாதுகாக்கும் வகையில் தேசிய பாதுகாப்பு சட்டம் உருவாக்கப்பட வேண்டும் - என்றார். (ஐ)






# மக்கள் சலித்து விடவேண்டாம்; மே தின கூட்டத்தில் பிள்ளையான்

மட்டக்களப்பு, மே. 03

மக்களுக்கு வாக்குறுதியளித்தது போன்று நாம் கிழக்கு மாகாணத்தின் தனித்துவத்தைத் தொடர்ந்து பாதுகாப்போம் என என மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான, சி.சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு களுதாவளை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மே தின கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- மீண்டும் மீண்டும் இனவாதப் பேச்சுக்களைப் பேசுகின்ற கூட்டம் இன்னமும் இருக்கத்தான் செய்கிறது. பட்டிருப்புத் தொகுதியில் கடந்த காலங்களில் இருந்தவர்கள் பாலம் வேண்டாம் சிங்களவர்கள் வந்து விடுவார்கள், தமிழர்களைச் சிங்களம் கற்க வேண்டாம் எனத் தெரிவித்தனர்.

தற்போது அவர்களின் வாரிசுகள் வந்து அவர்கள் எதையெல்லாம் வேண்டாம் என்று சொன்னார்களோ அதற்கு தலைகீழாக மாறி அதனையெல்லாம் பயன்படுத்தி எமது மக்களைப் பகடைக்காயாகப் பாவிக்கும் சூழல் தான் தற்போது மட்டக்களப்பு அரசியலில் மாறியிருக்கின்றது.

இவ்வாறான சதிகளிலிருந்து எமது மக்களைக் காத்துக் கொள்வது எமது மண்ணுக்கான மான்மீயத்தை எவ்வாறு தக்க வைத்துக் கொள்வது என்பது தொடர்பில் மிகக் கச்சிதமாகச் சிந்தித்து முன்னேறவேண்டிய காலகட்டத்தில்தான் நாங்கள் அரசியல் செய்து கொண்டிருக்கிறோம்.

பட்டிருப்பு பாலம் தற்போது உடைந்து விழும் அபாயத்தில் உள்ளது. எனவே நான் பொறுப்பு மிக்க அமைச்சர் என்ற ரீதியில் பட்டிருப்பு பாலத்தையும், சந்திவெளி பாலத்தையும், ஒரு வெளிநாட்டுத் திட்டத்தின் கீழ் செப்பனிடுவதற்குத் திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றோம்.

தற்போதைய அரசாங்கத்தினூடாக அடுத்து வரும் வருடங்களில் கல்வி, பொருளாதார நிலைமைகளையும் நாங்கள்





மீட்டெடுக்க முடியும் என நம்புகின்றோம். எனவே எமது மக்கள் சலித்து விடவேண்டாம். மக்களுக்கு வாக்குறுதியளித்தது போன்று நாம் கிழக்கு மாகாணத்தின் தனித்துவத்தைத் தொடர்ந்து பாதுகாப்போம்.

மக்கள் எமக்கு அளித்த வாக்கின் பிரகாரம் தற்போது நான் அரச பிரதிநிதி என்ற அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறும் அனைத்து அபிவிருத்தி செயற்பாடுகளிலும் முன்னின்று செயற்படுவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது கட்சி அடைய முடியாத இலக்குகளுக்காகப் போராடாமல் மக்களை இரத்தம் சிந்த வைக்காமல் ஜனநாயக ரீதியாகப் போராடி கையில் இருக்கின்ற மாகாணசபைக்கு அதிகாரங்களைப் பெற்றுக் கொடுக்கின்ற விடயங்களில் கவனம் செலுத்துமே தவிர இன்றுமே மக்களை மடையர்களாக்குகின்ற செயல்பாடுகளுக்குக் கட்சி ஆதரவு வழங்காது.

எனக்கு 3 வயதிலே இந்த நாட்டில் 1979ஆம் ஆண்டு பயங்கரவாத தடைச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. எனது 40 வயதில் அந்த சட்டத்தால் கைது செய்யப்பட்டு 5 வருடங்கள் சிறையிலிருந்து 45 வயதில் வெளியே வந்தேன். பயங்கரவாத தடைச் சட்டம் என்பதை நான் தனிப்பட்ட ரீதியில் உணர்ந்திருக்கின்றேன்.

அச்சட்டம் பற்றி மக்களும் அறிவார்கள். அது ஏற்றுக் கொள்ள முடியாத சட்டமாகும். இருந்தாலும் உலகத்தில் எங்கேயும் பயங்கரவாத தாக்குதல்கள் இடம்பெறக்கூடாது, பயங்கரவாதிகள் மக்களுக்குச் சவால் விட முடியாது-என்றார்.

(அ)






## திருமலையில் நுங்கு திருவிழா

திருமலை, மே. 03

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு வடக்கு-கிழக்கு பிரதேசத்தில் காணப்படும் தமிழர் கலாசார மற்றும் பாரம்பரிய ரீதியான தொழில் துறையான பனை சார் தொழில் துறையை அடையாளபடுத்தும் நோக்குடன் திருக்கோணமலை தளம் அமைப்பினால் மே (01) “நுங்கு திருவிழா” எனும் பெயரில் கருத்தமர்வு மற்றும் நுங்கு பகிர்வு நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது வளவாளராக முன்னாள் சமூக சேவை உத்தியோகத்தர் வேதநாயகம் தபேந்திரன் கலந்துகொண்டு, பனை சார் உற்பத்தி மற்றும் பனை சார் பொருளாதாரம் தொடர்பில் மிக ஆக்கபூர்வமான கருத்துக்களை பங்குபற்றுனர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

கலாசார உத்தியோகத்தர் வி. குணபாலாவும் பனை சார் பொருளாதாரம், அவற்றின் முக்கியத்துவம் தொடர்பில் தன் கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்.


அத்துடன் தளத்தின் இயக்குநர் சி. ஹயக்கிரிவன் பனை சார் உற்பத்திகளுடன் தொடர்புடைய சாதியம் தொடர்பான நடைமுறைகள் தொடர்பில் தனது கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்.

இதில் பல இளம் தலைமுறையினர் கலந்துகொண்டு முக்கிய விடயங்களை அறிந்து கொண்டனர்.

இதன் பின்னர் ஒரு வளமான உணவான நுங்கு பகிர்வு இடம்பெற்றது. இன்றைய காலகட்டத்தில் சமூகம் மறந்துபோகும் ஒரு விடயமாக நுங்கு காணப்படுவதுடன், சத்து மிக்க ஒரு உணவுப் பொருளும் ஆகும்.

அதன் அடிப்படையில் அதனை மீண்டும் இந்த சமூகத்திற்கு வழிகாட்டும் வகையில் இளையோருடன் நுங்கு உண்ணுதல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## உகந்தைமலை முருகன் ஆடிவேல் கொடியேற்றம் ஜுலை 18ஆம் திகதி



அக்கரைப்பற்று, மே. 03

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தை மலை முருகன் ஆலய வருடாந்த ஆடி வேல் விழா உற்சவம் எதிர்வரும் ஜுலை 18ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

திருவிழா ஆலய பிரதம குரு சிவஸ்ரீ க.கு.சீதாராம் குருக்கள் தலைமையில் உதவிக் குரு கோபிநாத சர்மா உதவியுடன் சிறப்பாக நடைபெறவுள்ளது.

ஆடிவேல் விழா உற்சவம் தொடர்ந்து 13 நாட்கள் இடம்பெற்று ஓகஸ்ட் 02ஆம் திகதி தீர்த்த உற்சவத்துடன் நிறைவடையை இருப்பதாக ஆலய பரிபாலன சபை வண்ணக்கர் டி.எம்.சுதுநிலமே திசாநாயக்க தெரிவித்தார்.

வழக்கம்போல அன்னதானம் மற்றும் பஸ் போக்குவரத்து ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இம்முறை கதிர்காமம் முன் கூட்டி வருவதால் உகந்தமலை முருகன் ஆலய ஆடிவேல்விழா மிகவும் சிறப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, கதிர்காமம் ஆடிவேல் விழா உற்சவத்தை முன்னிட்டு தற்பொழுது பெருந்திரளான பக்தர்கள் அங்கு பாத யாத்திரையாக செல்ல ஆரம்பித்துள்ளனர்.

(அ)

## பாடசாலை மாணவர்களின் கல்வியை மேம்படுத்த திட்டம்

திருமலை, மே. 03

திருகோணமலை - வெருகல் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பின்தங்கிய 5 தமிழ் பாடசாலை மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கில், “மகிழ்வோம் - மகிழ்விப்போம்” எனும் தொனிப்பொருளைக் கொண்ட வேலைத்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு, பூநகர் திருவள்ளுவர் வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வை, வெருகல் பிரதேச பல்கலைகழக மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

05 வருட திட்டத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்நிகழ்வை ஸ்பெயின் நாட்டில் வசிக்கும் சமூக செயற்பாட்டாளர் நேதாஜியின் தாயார் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்த சாதனையாளர்கள் பதக்கங்கள் அணிவிக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் ஈச்சிலம்பற்று கோட்டக் கல்விப்பணிப்பாளர், பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள், துறைசார் உத்தியோகத்தர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், பூநகர் பிரதேச சமூக மட்டத் தலைவர்கள், பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

(அ)

# மோடி பயணித்த வாகனம் மீது வீசப்பட்ட கைத்தொலைபேசி!

## மைசூரில் பெரும் பரபரப்பு

புதுடில்லி, மே. 03

**மைசூர் நகரில் இந்தியப் பிரதமர் மோடி ஊர்வலமாக பிரசாரம் செய்தபோது பூக்களுடன் கைத்தொலைபேசி வீசபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.**

பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன் தினம் முதல் கர்நாடக சட்டமன்ற தேர்தலுக்கு தீவிர பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார். பெங்களூரில் சாலையில் ஊர்வலமாகச் சென்று பிரசாரம் செய்த நிலையில் நேற்று முன் தினம் இரண்டு பொதுக்கூட்டங்களை முடித்துக் கொண்டு மாலையில் மைசூர் நகரில் வீதியில் ஊர்வலமாக சென்று தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டார்.

வழி நெடுகிலும் பா.ஜ.க தொண்டர்கள் மோடியை வரவேற்க இருபுறமும் நின்று கொண்டு அவர் மீது பூக்களை வீசிக் கொண்டிருந்தனர்.

அப்போது ஒரு இடத்தில் பூக்களுடன் சேர்ந்து பிரதமர் வாகனத்தின் மீது கைத்தொலைபேசி வீசப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. பா.ஜ.க தொண்டர் பூக்களை வீசும்போது தவறுதலாக பூக்களுடன் கைத்தொலைபேசி பிரதமர் வாகனத்தின் மீது விழுந்ததா அல்லது வேண்டுமென்று மர்ம நபர்கள் கைத்தொலைபேசியை வீசினார்களா என்பது குறித்து பொலிஸ் விசாரணை நடத்தி வருகின்றது.





பிரதமரை நோக்கி கைத்தொலைபேசி வீசப்பட்டபோதும் அது அவர் மேல் விழாமல் வாகனத்தின் முன் பகுதியில் விழுந்ததால் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டுள்ளது. இந்த சம்பவத்தால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

விசாரணையில், பா.ஜ.க பெண் உறுப்பினர் ஒருவர், பிரதமர் மோடிக்கு பூக்களை வீசியபோது தற்செயலாக அவரது கைத்தொலைபேசியையும் வீசிவிட்டதாக கூறப்படுகிறது.

உற்சாகத்தின் மிகுதியால் கைத்தொலைபேசியை வீசிவிட்டதாகவும், மற்றபடி தவறான எண்ணம் ஏதும் அந்தப் பெண்ணுக்கு இல்லை என்று கூடுதல் பொலிஸ் இயக்குநர் அலோக் குமார் கூறினார்.

(அ)

# பிரான்ஸ் ஆர்ப்பாட்டம் 108 பொலிஸார் காயம்




கொழும்பு, மே. 03

ஓய்வூதிய மறிசீரமைப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்து பிரான்ஸில் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது குறைந்தது 108 பொலிஸ் அதிகாரிகள் காயமடைந்துள்ளதாக அந்நாட்டின் உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 291 பேர் அந்த நாட்டு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர.

பிரான்ஸ் ஜனாதிபதியின் ஓய்வூதிய திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து மே தினத்தில் இலட்சக்கணக்கான மக்கள் பேரணியில் பங்கேற்றிருந்தனர்.

ஸ்ரீஆரப்பாட்டத்தில் ஈடுப்பட்டவர்களை கலைக்க கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. (அ)

# திருமணமாகாத பெண்களும் இனி குழந்தைகள் பெறலாம்!

## சீன அரசு அனுமதி

பீஜிங், மே. 03

திருமணமாகாத பெண்கள் ஊதியத்துடன் கூடிய மகப்பேற்று விடுப்பை எடுத்துக்கொண்டு, செயற்கைக் கருவுற்றல் மூலம் குழந்தை பெற்றுக்கொள்ள சீனாவில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது

சீனாவில் பிறப்பு வீதத்தை அதிகரிப்பதற்காகத் திருமணமாகாத பெண்களும் இனி குழந்தைகள் பெற்றுக்கொள்ளலாம் என சீன அரசு புதிய அறிவிப்பொன்றினை விடுத்துள்ளது.

பிறப்பு வீதத்தின் அடிப்படையில் சீனாவைப் பின்தள்ளி இந்தியா தற்போது முன்னணி வகிக்கும் நிலையில், சீன அரசு, குழந்தைப் பிறப்பு வீதத்தை அதிகரிக்க பல்வேறு முனைப்புகளை மேற்கொண்டுவருகிறது.



மகப்பேறு விடுப்புக்கான ஊதியம், புதுமணத் தம்பதிகளுக்கு சம்பளத்துடன் கூடிய 30 நாள் விடுப்பு உள்ளிட்ட சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், அதன் அடுத்த கட்டமாக திருமணமாகாத பெண்கள் ஊதியத்துடன் கூடிய மகப்பேற்று விடுப்பை எடுத்துக்கொண்டு, செயற்கைக் கருவுற்றல் மூலம் குழந்தை பெற்றுக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (அ)

# அமெரிக்காவில் புழுதிப் புயலால் வாகனங்கள் மோதுண்டு விபத்து



நியூயோர்க், மே. 03

அமெரிக்காவின் இல்லினாய்ஸ் மாகாணத்தில் திடீரென வீசிய புழுதிப் புயலால் நெடுஞ்சாலையில் 80 வாகனங்கள் ஒன்றோடொன்று மோதியதால் சங்கிலித் தொடர் விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் வாகன நெரிசலில் உடல் நசுங்குண்டு 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்து, முப்பதுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிக்காக்கோவில் இருந்து 300 கிலோமீற்றர் தொலைவில் உள்ள போர்மர்ஸ்வில்லி நகருக்கு அருகே இண்டர்ஸ்டேட் 55 நெடுஞ்சாலையில் ஏராளமான வாகனங்கள் தொடராகச் சென்றுகொண்டிருந்தபோது, திடீரெனப் பலத்த காற்று வீசியதால் புழுதிப் புயல் உருவானது.

குறித்த பகுதியே புகை மூட்டமாகக் காணப்பட்டதால், பின்னால் வந்த வாகனங்கள் ஒன்றுக்கொன்று மோதி விபத்து சம்பவித்துள்ளது.

(அ)

# நடுவானில் நேருக்குநேர் மோதிய விமானங்கள்!

## நால்வர் உயிரிழப்பு

மட்ரிட், மே. 03

வடகிழக்கு ஸ்பெயினில் பார்சிலோனா நகரின் வடக்கே அமைந்துள்ள மோயா நகர விமான நிலையத்தின் அருகே இரு இலகுரக விமானங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

விபத்தில் நால்வர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

விமானங்கள் விபத்துக்குள்ளானதை நேரில் கண்ட ஒருவர் வழங்கிய தகவல்களுக்கு அமையவே மீட்பு பணியாளர்களினால் தேடுதல் பணிகள் முன்னெடுக்கப்பட்டது.

இதில் ஒரு விமானம் விமான நிலையத்தின் அருகே மரங்கள் நிறைந்த பகுதியில் விழுந்து தீப்பற்றியதாக தெரிவிக்கப்படுவதுடன், விமானத்தில் பயணித்த இருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

அதன்பின்னர் நீண்ட தேடுதல் பணிக்கு பிறகு இரண்டாவது விமானத்தை கண்டுபிடித்ததுடன், அதில் பயணித்த இருவர் உயிரிழந்துள்ளனர்.



இரண்டு விமானங்களும் நடுவானில் மோதிக் கொண்டதலே இவ்விபத்து இடம்பெற்றிருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் விபத்து தொடர்பாக தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

(அ)



# ஆசியக் கிண்ணத் தொடருக்கு நேபாளம் நேரடியாகத் தகுதி!

காத்மண்டு, மே 03

காத்மண்டுவில் நேற்று நடைபெற்ற ஏ. சி. சி. ஆடவர் பிறீமியர் கோப்பை கிரிக்கெட் இறுதிப் போட்டியில் நேபாள அணி ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியை 7 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது. இதன் மூலம் 2023 ஆசியக் கிண்ணத் தொடரில் விளையாட நேபாள அணி தகுதி பெற்றுள்ளது.

காத்மண்டுவில் உள்ள திரிபுவன் பல்கலைக்கழக மைதானத்தில் நேற்று நடந்த போட்டியில் 17 வயதான குல்ஷன் குமார் ஜா 84 பந்துகளில் குவித்த 67 ஓட்டங்கள் நேபாள அணியின் வெற்றியை உறுதி செய்தது. இதன்மூலம் நேபாள கிரிக்கெட் அணி, செப்ரெம்பரில் நடக்கும் ஆசியக் கிண்ணப் போட்டிக்கு முதன் முறையாக தகுதி பெற்றுள்ளது, மேலும் அந்த அணி குழு 'ஏ'இல் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுடன் இடம்பெற்றுள்ளது.

ஆசிய கோப்பை தொடர் பாகிஸ்தானில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது முதலே அது இந்தியாவில் கடும் விவாதத்துக்கு உள்ளானது. இரண்டு நாடுகளுக்கும் பொதுவான ஓர் இடத்தில் இத்தொடரை வேண்டும் என்று இந்தியா கோரிக்கை விடுத்திருந்தது.

ஆசியக் கோப்பையில் பங்கேற்க இந்திய அணி பாகிஸ்தானுக்கு செல்லாது என்று ஏ. சி. சி. தலைவர் ஜெய்ஷா கடந்த ஆண்டே திட்டவட்டமாக அறிவித்து விட்டார். இதற்கு பதிலளித்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தலைவர் நஜாம் சேத்தி, ஆசிய தொடரில் பாகிஸ்தான் அணி தனது போட்டிகளை உள்நாட்டிலும், இந்திய அணி அதன் போட்டிகளை பொதுவான ஒரு இடத்திலும் விளையாடும் என்று முடிவு செய்துள்ளதாக கூறியிருந்தார்.

ஆறு அணிகள் பங்கேற்கும் ஆசிய கோப்பை செப்ரெம்பர் 2 முதல் 17 வரை நடைபெறும். எனினும், போட்டி நடைபெறும் இடம் இன்னும் தெரிவு செய்யப்படாததால் போட்டிகளின் சரியான அட்டவணை இன்னும் வெளியிடப்படவில்லை. (ஐ)



# டெஸ்ட் தரவரிசை; இந்தியா முதலிடம்

டுபாய், மே 03

டெஸ்ட் தரவரிசையில் 121 புள்ளிகளுடன் அவுஸ்திரேலிய அணியை பின்தள்ளி இந்திய அணி முதலிடம் பிடித்துள்ளது.

டெஸ்ட் மற்றும் இருபது -20 அணிகளின் தரவரிசை பட்டியலை ஐ. சி. சி. நேற்று வெளியிட்டது. 2020 ஆம் ஆண்டு மே முதல் நடந்த மே 2022 வரை போட்டிகளின் முடிவுகள் 50 சதவீதமும், நடப்பு பருவகாலத்தின் போட்டிகள் முழுமையாகவும் கணக்கில் கொள்ளப்படும். இதன் அடிப்படையில் வருடாந்திர தரவரிசையில் சில மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

இதில், டெஸ்ட் தரவரிசையில் 121 புள்ளிகளுடன் ஆஸ்திரேலிய அணியை பின்னுக்கு தள்ளி இந்திய அணி முதலிடம் பிடித்துள்ளது. 116 புள்ளிகளுடன் அவுஸ்திரேலிய அணி 2ஆவது இடத்தில் உள்ளது. முன்னர் மூன்றாவது இடத்தில் இருந்து நியூசிலாந்து தொடருடனான போட்டியில் கீழிறங்க ஆரம்பித்த இலங்கை 5ஆவது இடத்தில் உள்ளது. (ஐ)

# நவீன் - கோலி- கம்பீர் தர்க்கம்; தண்டம் விதிப்பு!

லக்னோ, மே 03

இந்திய முன்னாள் தலைவர் விராட் கோலியும் முன்னாள் வீரர் கௌதம் கம்பீரும் ஐ. பி. எல். 2023 தொடரின் நேற்றுமுன்தினம் நடந்த போட்டியின் பின்னர் கடும் தர்க்கத்தில் ஈடுபட்டனர். இது கிரிக்கெட் உலகில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

பெங்களூர் அணி லக்னோ அணியை 18 ஓட்டங்களால் தோற்கடித்த பின்னர் இந்த சம்பவம் இடம்பெற்றது. இந்த சம்பவம் பத்து வருடங்களுக்கு முன்னர் ஐ. பி. எல். போட்டியில் இருவரும் மோதிய சம்பவத்தை நினைவுபடுத்தியுள்ளது.

போட்டியின் முடிவில் வீரர்கள் கைகுலுக்கிக் கொண்டவேளை லக்னோ அணியின் வீரர் நவீன் உல் ஹக்( ஆப்கான் வீரர்) விராட் கோலியுடன் தர்க்கத்தில் ஈடுபட்டார்.

இதன் பின்னர் தனது அணியின் ஆரம்பதுடுப்பாட்ட வீரர் கைல் மேயர்ஸ் கோலியுடன் கதைப்பதை தடுத்த கௌதம் கம்பீர் அவரை தனது பக்கத்துக்கு இழுத்தார்.

இதற்கு சில நிமிடங்களின் பின்னர் விராட் கோலியை நோக்கி கௌதம் கம்பீர் ஆக்ரோஷமாக செல்வதை அவதானிக்க முடிந்தது. கே. எல். ராகுல் அவரை தடுக்க முயன்றார்.




எனினும் இருவரும் நெருங்கிவந்ததும் விராட் கோலி கௌதம் கம்பீரின் தோளில் கையை வைத்து அவரை சமாதானப்படுத்த முயன்றார். ஆனால், இருவருக்கும் இடையிலான உரையாடல் மோதல் போக்காக மாறியது இதனை தொடர்ந்து முன்னாள் சுழல் பந்து வீச்சாளர் அமித் மிஸ்ரா இருவருக்கும் இடையில் புகுந்து இருவரையும் அமைதிப்படுத்தினார்.

இருவரும் மைதானத்தில் நடந்து கொண்ட விதத்துக்காக ஐ. பி. எல். இருவருக்கும் அபராதம் விதித்துள்ளது.

ஆர். சி. பி. முதலில் 126 ஓட்டங்களை பெற்றபோதிலும் பெங்களூர் அணியை வெற்றி இலக்கை எட்ட விடாமல் வெற்றிகரமாக கட்டுப்படுத்தியிருந்தது.

களத்தடுப்பின்போது விராட் கோலி ஆக்ரோஷமாக காணப்பட்டார். பாண்ட்யாவை ஆட்டமிழக்க செய்வதற்காக பிடியெடுத்த பின்னர் ரசிகர்களை நோக்கி அமைதியாக இருங்கள் என விராட் சைகை காட்டினார். இதற்கு முன்னர் இரு அணிகளுக்கும் இடையில் இடம் பெற்ற போட்டியின் போது இறுதி பந்தில் லக்னோ அணி வெற்றி பெற்றவேளை பெங்களூர் ரசிகர்களை அமைதியாகயிருக்கும்படி கௌதம் கம்பீர் சைகை காட்டியதற்கான பதிலடியாக இது இருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது.

இதனிடையே தர்க்கத்தில் ஈடுபட்ட விராட் கோலி, கம்பீர் ஆகியோருக்கு போட்டி ஊதியத்தில் 100 வீதமும், நவீன் உல் ஹக்குக்கு 50 வீதமும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பெங்களூரின் சிறப்பு ஆட்டம் லக்னோவை முடக்கியது!

லக்னோ, மே 03

கட்டுக்கோப்பாக பந்துவீசி - களத்தடுப்பிலும் சிறப்பாக செயல்பட்ட பெங்களூர் அணி 18 ஓட்டங்களால் லக்னோ அணியை ஓட்டங்களால் வெற்றிகொள்ள செய்தனர்.

நேற்று முன்தினம் நடந்த இந்தப் போட்டியில், அணித் தலைவர் பப் டூ பிளசிஸ் அதிகபட்சமாக 44 ஓட்டங்களை பெற்றதன் பலனாக றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றது.

தொடர்ந்து பெங்களூர் பந்துவீச்சாளர்கள் துல்லியமாக பந்து வீசியதால் லக்னோ சுப்பர் ஜயன்ட்ஸ் 19.5 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 108 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வி அடைந்தது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூருக்கு கோலி, டூ பிளசிஸ் தொடக்கம் கொடுத்தனர். 9 ஓவர்க ளில் இருவரும் 62 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றனர். கோலி 31, டூ பிளசிஸ் 44 ஓட்டங் களை பெற்றனர்.

ஆனால், சுழல்பந்துவீச்சாளர்களான ரவி பிஷ்னோய், அமித் மிஷ்ரா, கிருஷ்ணப்பா கௌதம் ஆகியோரும் வேகப்பந்துவீச்சாளர் நவீன் உல் ஹக்கும் 8 விக்கெட்களைக் கைப்பற்றி பெங்களூரை 126 ஓட்டங்களுக்கு கட்டுப்படுத்தினர்.




கோலி, டூ பிளசிஸ் ஆகியோரை விட தினேஷ் கார்த்திக் (16) மாத்திரமே ஈரிலக்க ஓட்டத்தை பெற்றார்.

பந்துவீச்சில் நவீன் உல் ஹக் 3, ரவி பிஷ்னோய், அமித் மிஷ்ரா ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கிருஷ்ணப்பா கௌதம் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய லக்னோ சுப்பர் ஜயன்ட்ஸின் ஆரம்பம் சிறப்பாக அமையவில்லை. போதாக்குறைக்கு போட்டியின் 2ஆவது ஓவரில் களத்தடுப்பில் ஈடுபட்டிருந்தபோது உபா தைக்குள்ளான அணித் தலைவர் கே. எல். ராகுல் களத்தை விட்டு வெளியேறினார்

றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் பந்துவீச்சாளர்களை எதிர்கொள்வதில் பெரும் சிரமத்தை எதிர்கொண்ட லக்னோ சுப்பர் ஜயன்ட்ஸ் 7 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட் களை இழந்து 38 ஓட்டங்களைப் பெற்று தடுமாறியது.

எனினும், மத்தியவரிசையில் நால்வர் ஈரிலக்க ஓட்டத்தை பெற்றதால் லக்னோ சுப்பர் ஜயன்ட்ஸ் 100 ஓட்டங்களைக் கடந்தது.

குர்ணல் பாண்ட்யா (14), மார்க்கஸ் ஸ்ரொய்னிஸ் (13), கிருஷ்ணப்பா கௌதம் (23), அமித் மிஷ்ரா (19), நவீன் உல் ஹக் (13) ஆகிய ஐவரே ஈரிலக்க ஓட்ட வரிசையை பெற்றனர்.

கே. எல். ராகுல் கடைசி ஆட்டக்காரராக துடுப்பெடுத் தாடிய போதிலும் அவரால் ஓட்டம் பெறமுடியாமல் போனது.

பந்துவீச்சில் ஜோஷ் ஹசல்வூட் கர்ண் ஷர்மா தலா 2 விக்கெட்களையும் கைபற்றினர். (ஐ)

# 6 இலட்சத்துக்கும் அதிகமானோர் தொழில்வாய்ப்பை இழந்துள்ளனர்

## சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 3

**கடந்த ஒரு வருடத்தில் 6 இலட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் தொழில்வாய்ப்பை இழந்துள்ளனர் என்று 43ஆவது படையணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக 2022ஆம் ஆண்டு மே மாதம் 01ஆம் திகதி முதல் இவ்வருடம் மே மாதம் 1ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 6 இலட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் தொழிலை இழந்துள்ளனர்.

அதேபோன்று குறித்த காலப்பகுதியில் உலக வங்கியின் அறிக்கைக்கு அமைவாக நாட்டின் ஏழ்மை நிலையானது இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது.

நூற்றுக்கு 12 சதவீதமாகக் காணப்பட்ட எமது ஏழ்மை நிலைமை நூற்றுக்கு 26 சதவீதம் வரை அதிகரித்துள்ளது.

நாளொன்றுக்கு 2.75 டொலரையும் விட குறைவான வருமானத்தை பெற்றுக்கொள்ளும் குடும்பங்களின் எண்ணிக்கை நூற்றுக்கு 26 சதவீதம் வரை அதிகரித்துள்ளது.

இது இரண்டு மடங்கு அதிகரிப்பாகும்.

கடனை மறுசீரமைப்பு செய்யும் திட்டத்தின் கீழ் தொழில்புரியும் மக்களின் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியின் 3600 பில்லியன் தொகையில் ஒரு பகுதி இல்லாமல் போகும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

அதேபோன்று அரச நிறுவனங்களை மறுசீரமைப்பு செய்யும் விடயத்தில் விஞ்ஞான ரீதியாக செயற்படாததன் காரணமாக அரச நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள் வர்க்கம் பாரிய சவால்களை எதிர்கொள்ளவுள்ளது.

அதேபோன்று பாரியளவிலான வியாபாரங்களில் ஈடுபட்டு வரும் தரப்பினர் தங்களது தொழிலாளர்களை தொழிலிருந்து நீக்கும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

வியாபாரங்களை கைவிடும் நிலைமை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

அதேபோன்று வைத்தியத் துறை, பொறியியல் துறை உள்ளிட்ட தொழில்துறைகளில்



பணியாற்றிவரும் தரப்பினர் நாட்டை கைவிட்டுச் செல்லும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இவை அனைத்து சவால்களுக்கு மத்தியிலேயே தொழிலாளர் தினம் கொண்டாடப்பட்டது.

இந்த சவால்களிலிருந்து விடுபட்டு நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லவேண்டியது அவசியமாகும்.

புதிய தொழில்நுட்ப வசதிகளினூடாக புதிய தொழில் வாய்ப்பை ஏற்படுத்துகின்றனர். இருக்கும் தொழிலை இல்லாமல் செய்கின்றனர்.

எனவே புதிய தொழல்நுட்ப வசதிகளுக்கு ஏற்ப தொழில் வாய்ப்பு சந்தையை ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் கல்வித்துறையினூடாக இளம் சமுதாயத்தினரை தயார்ப்படுத்த வேண்டியது அவசியமாகும்-என்றார். (அ)

# ஜனாதிபதி பதவியில் ரணில் இரண்டு தடவைகள் நீடிப்பார்

## கூறுகின்றார் அகில விராஜ்

கொழும்பு, மே. 03

தமது அரசியல் எதிரிகளின் மனங்களையும் வென்று நாட்டை மீட்பதற்கான பயணத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்துள்ளார். அவர் இரு தடவைகள் ஜனாதிபதி பதவியை நிச்சயம் வகிப்பார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

”ஜே.ஆர். ஜயவர்தன 70 வயது கடந்த பின்னரே ஜனாதிபதியானார். இரு தடவைகள் அப்பதவியில் நீடித்தார். நாட்டுக்கு சிறப்பான சேவையை வழங்கினார்.



தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் 70 வயது கடந்துதான் ஜனாதிபதியாகியுள்ளார். அவரும் நாட்டில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்துவார். வளமான எதிர்காலத்தை உருவாக்குவார். 2048 இல் இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதற்கு அவரும் இரு தடவைகள் பதவியில் இருப்பார்.” எனவும் அகில குறிப்பிட்டார். (அ)

# வெசாக் வாரத்தில் மக்களே முகக் கவசம் அணியுங்கள்!

கொழும்பு, ஏப்.

வெசாக் வாரத்தில் மக்களுடன் அதிகமாக வெளியே நடமாடுவதால் முகக் கவசம் அணிவது சிறந்தது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

மீண்டும் கோவிட் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதன் காரணமாக மக்களை மிகவும் கவனமாக இருக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

முகக் கவசம் அணிவது ஒரு கட்டாய சட்டம் அல்ல, ஆனால் ஒரு கோரிக்கை என அவர் கூறினார்.

சுகாதாரப் பழக்க வழக்கங்களை அனைவரும் பின்பற்றுவது மிகவும் அவசியம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# பால்மா விலையில் மாற்றம்?

கொழும்பு, மே. 03

இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை குறைவதற்கான சாத்தியக்கூறுகள் ஏற்பட்டுள்ளதாக பால்மா இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

பெரும்பாலும் இந்த மாத இறுதியில் அல்லது அடுத்த மாத ஆரம்பத்தில் பால்மாவின் விலை குறைவடையும் என சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர் லக்ஷ்மன் வீரசூரிய தெரிவித்தார்.

இலங்கை ரூபாவுக்கு நிகரான அமெரிக்க டொலரின் பெறுமதிக்கு அமைய எதிர்காலத்தில் இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை மேலும் குறையும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# சஜித் அணியின் மே தினத்தில் ராஜித கலந்துகொள்ளவில்லை

கொழும்பு, மே. 03

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான மயந்த திஸாநாயக்க மற்றும் ராஜித சேனாரத்ன ஆகியோர், நேற்று முன் தினம் கொழும்பு ஏ.ஈ.குணசிங்க விளையாட்டரங்கில் நடைபெற்ற, கட்சியின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க தனிப்பட்ட பயணம் ஒன்றை மேற்கொண்டு வெளிநாடு சென்றுள்ளார் என்று அவருக்கு நெருக்கமான தரப்புகள் தெரிவித்தன.

எனினும், ராஜித சேனாரத்ன சமூகம் தராமைக்கான காரணம் வெளியாகவில்லை.

மேற்படி இரண்டு எம்.பிக்கள் உள்ளிட்ட ஒரு குழுவினர் ரணில் அரசுடன் இணையவுள்ளனர் என்று அண்மைக் காலமாகச் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நாட்டை மீட்கும் குறிக்கோள் எதிர்க்கட்சிகளிடம் இல்லை

## ஹரின் பெர்னாண்டோ கூறுகிறார்

கொழும்பு, மே. 03

நாட்டினை மீட்டெடுக்க வேண்டும் என்ற குறிக்கோள் எதிர்க்கட்சிகளிடம் கிடையாது என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அடுத்த வருடத்தில் சுற்றுலாத்துறையை அதிக வருமானம் ஈட்டும் துறைகளில் முதலிடத்துக்கு கொண்டு வரவேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

அந்த சவாலை ஏற்றுக் கொண்டு செயற்பட்டு வருகின்றோம். இன்று வரை எமது அமைச்சினால் 2.5 பில்லியன் வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

எதிர்கால சந்ததிக்காக நல்லதொரு நாட்டினை உருவாக்க வேண்டும் என்பதே ஜனாதிபதியின் நோக்கமாகும். அதற்காக அவர் 2048 ஆகும்போது நாட்டை வெற்றி கொள்வார்.

இவற்றை நமக்காகவே செய்கிறார். இதற்கு ஒரு வருடத்திற்கு முன்னதாக காணப்பட்ட நிலைமையை தலைகீழாக மாற்றியவரும் அவரேயாவார்.

எதிர்க்கட்சிகளுக்கு ஆர்ப்



பாட்டங்களை செய்வது மாத்திரமே நோக்கமாக இருந்தாலும் அடுத்த சந்ததிக்கான அபிவிருத்தி அடைந்த நாட்டை உருவாக்குவதே எமது நோக்கமாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியை ஒருவராலும் வீழ்த்த முடியாது. அதனால் அடுத்த 5 வருடங்களுக்குள் இந்நாட்டவர் அனைவருக்கும் தங்களுக்கு உரித்தான காணி இருக்கும் என்பதை நான் உறுதியளிக்கிறேன்-என்றார். (அ)

# பயிற்சிகளுக்காக வெளிநாடு சென்ற வைத்தியர்கள் நாடு திரும்பவில்லை

கொழும்பு, மே. 03

இவ்வருடத்தில் பயிற்சிக்காக வெளிநாடு சென்ற 67 விசேட வைத்திய நிபுணர்கள், நாட்டுக்கு மீள வருகை தரவில்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட நிலையில் குறித்த வைத்திய நிபுணர்கள் வெளிநாடு சென்றுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் அசேல குணவர்தன குறிப்பிட்டார்.

இதனிடையே, பயிற்சிக்காக வெளிநாடு சென்ற சுமார் 400 வைத்தியர்கள் இதுவரை நாடு திரும்பவில்லை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# தேவையான நிலக்கரி கையிருப்பில் உள்ளது

கொழும்பு, மே. 03

நாட்டில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரை மின்சார உற்பத்திக்கு தேவையான நிலக்கரி உள்ளதாக இலங்கை நிலக்கரி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நிலக்கரி கட்டளை தற்போது நிறுத்தப்பட்டுள்ளதாக அந்த நிறுவனத்தின் தலைவர் ஹேஷான் சுமனசேகர தெரிவித்தார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரையிலான மின் உற்பத்திக்குத் தேவையான நிலக்கரி, 30 கப்பல்கள் ஊடாக நாட்டுக்கு கொண்டு வரப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இதுவரை 29 கப்பல்கள் புத்தளத்தை அடைந்துள்ளன.

நிலக்கரி அடங்கிய 30 ஆவது கப்பல் இன்று அல்லது நாளை நாட்டை வந்தடையும் எனவும் இலங்கை நிலக்கரி நிறுவனத்தின் தலைவர் ஹேஷான் சுமனசேகர தெரிவித்தார். (அ)

## தீர்வை...

கோவிந்தன் கருணாகரம்.

ஜனாதிபதியின் மே தின உரையில் இனப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதில் தமிழ்த் தரப்பு பின்னடிப்பதாக தெரிவிக்கப்பட்ட கருத்துக்கு பதிலளிக்கும் முகமாக நேற்று மட்டக்களப்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மே தின உரையிலே இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த வருட இறுதிக்குள் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்னைக்கு ஒரு நிரந் தரத் தீர்வை காண்பதற்கு தான் உத்தேசித்தமை என்றவாறான கருத்தை வெளியிட்டிருந்தார். இதேபோன்றுதான் கடந்த ஆண்டு சென்ற இலங்கையின் சுதந்திர தினத்துக்கு முன்பதாக இனப்பிரச்னைக்கான தீர்வைக் காண்பதாகக் கூறியிருந்தார்.

அவரின் உரையில் மேலும் இந்த ஆண்டுக்குள்ளே இனப்பிரச்னைக்கான தீர்வைக் காண்பதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும், தமிழ்த் தரப்புகள், குறிப்பாக தமிழ் கட்சிகள் இந்தத் தீர்வு காணும் விடயத்தைப் பின்னடிப்பதாகவும் கூறியிருக்கிறார். இவர் சில விடயங்களை அறியாமல் இருந்திருக்க மாட்டார் என நினைக்கின்றேன். போராட்டம் தொடங்கிய காலத்தில் இருந்து ஒருபுறம் ஆயுதப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் இலங்கையிலே மாறிமாறி ஆண்ட அரச தரப்புடன் தமிழ்த் தரப்பினர் பேச்சுகளில் ஈடுபட்டுக் கொண்டு தான் இருந்தார்கள். இலங்கையில் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட் டதன் பின்னர் கூட மகிந்த ராஜபக்ஷவுடன் 18 சுற்றுப் பேச்சுகளில் ஈடுபட்டிருந்தார்கள்.

இதேபோன்று அதற்கு பின்னர் வந்த அரசுகளுடன் குறிப்பாக நல்லாட்சி என்று கூறப்படுகின்ற மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகவும் - ஜனாதிபதியையும் விட அதிகாரம் கொண்டவராக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் இருந்த அரசாங்கத்திலே பாராளுமன்றத்தை இனப்பிரச்னைக்குத் தீர்வு காணும் சபையாகக்கூட மாற்றி பல கூட்டங்களை நடத்தியும் இறுதியில் அது ஏமாற்றப்பட்டதாகவே அமைந்தது.

மீண்டும் தற்போது அனைத்து தமிழ் கட்சிகளும் பாராளுமன்றத்தில் தன்னுடன் இணைந்து ஒரு தீர்வைக் காண்பதற்கு முன்வர வேண்டும் என்று கூறுகின்ற ஜனாதிபதி அவர்கள் முதலாவதாக இந்த பொருளாதார நிலைமை இவ்வாறு மாறியதற்கு நாட்டின் இனப்பிரச்னை தான் முதல் காரணம் என்பதை சிங்களக் கட்சிகளுக்கும் பேரினவாதக் கட்சிகளுக்கும் சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கூறி அவர்களைத் தங்களுடன் இணைத்து இந்த இனப்பிரச்னைக்கு ஒரு தீர்வைக் காண்பதற்கு முயற்சிக்க வேண்டும். அந்த தீர்வுத் திட்டத்தை பாராளுமன்றத்திலும் தமிழ் மக்களிடமும் முன்வைத்து விட்டு தமிழ்த் தரப்புகளுடன் பேசினால் நாங்கள் ஒருபோதும் பேச்சுக்குப் பின்னடிக்கவோ, விலகி நிற்கவோ மாட்டோம் என்பதை உறுதியாகத் தெரியப்படுத்துகின்றோம்.

அதைவிடுத்து, தற்போதைய பொருளாதார நிலைமையைச் சீர் செய்வதற்காக மீண்டும் மீண்டும் தமிழ்த் தரப்புகளை ஏமாற்றி அரசாங்கத்தில் இணைய வைத்து இலங்கையின் பொருளாதாரத்தை நிலைநிறுத்துவதற்காக மக்களை ஏமாற்றாமல் உண்மையிலேயே இனப்பிரச்னைக்கு ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்து விட்டு எங்களுடன் பேச வாருங்கள். நாங்கள் உங்களுக்குப் பூரண ஒத்துழைப்புத் தருவது மாத்திரமல்லாமல் இந்த அரசாங்கங்களின் அட்டூழியங்களை, அநியாயங்களை, துன்புறுத்தல்களைத் தாங்க முடியாமல் இந்த நாட்டில் இருந்து சென்ற புலம்பெயர் தேசங்களில் நன்றாக செழிப்பாக வாழ்ந்து கொண்டிருக்கும் எங்களுடைய புலம்பெயர் உறவுகள் இந்த நாட்டின் பொருளாதாரத்தைக்கூட நிலைநிறுத்துவதற்கு உதவ முன்வருவார்கள் என்பதையும் நாங்கள் உறுதியாகக் கூறிக் கொள்கின்றோம் - என்றார். (ஐ)

## வரணியில்...

*12. 20 மணியளவில் பருத்தித்துறை - கொடிகாமம் வீதியில் தென்மராட்சி - வரணி - எருவன் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றது. இதில், வடமராட்சி - அல்வாயை சேர்ந்த சத்திய நாதன் சத்தியானந்த் (வயது -32) என்பவரே உயிரிழந்தார்.*

கொடிகாமம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் பருத்தித்துறை நோக்கிப் பயணித்த வானும் நேரடியாக மோதுண்டே இந்த விபத்து இடம்பெற்றது. விபத்தில் படுகாயமடைந்தவர் உடனடியாக சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் இலங்கை போக்குவரத்து சபையின் பணிமனையில் பணியாற்றுபவர் ஆவார். இந்த விபத்து குறித்து பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ-02)

## அமெரிக்க...

தில், 45 ஆண்டுகளுக்கும் மேலாக கறைபடாத அரசாங்க பணியில் நான் பெற்ற கௌரவம், நற்பெயரை நீங்கள் செய்த தவறான குற்றச்சாட்டுகள் கடுமையாகப் பாதித்துள்ளன. உங்களின் நடவடிக்கை ஐ. சி. சி. பி. ஆர்.இன் 17ஆவது பிரிவின் கீழ் எனது உரிமைகளை நேரடியாக மீறுவதாக உள்ளது.

மேலும், இலங்கையில் பொருந்தக் கூடிய சட்டத்தின் அடிப்படையில் எனது மனித உரிமைகளை முழுமையாக மீறுவதற்கு சட்ட நடவடிக்கை மூலம் பரிகாரம் தேடவுள்ளேன்.

அத்துடன், எனக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் இராஜாங்க செயலாளர் எனக்கு அறிவிக்கவில்லை. அவர் இந்தக் குற்றச்சாட்டுகள் எதிலும் எனது அவதானிப்புகளை கோரவில்லை என்றும் கூறியுள்ளார்.

இறுதிப் போர் நடவடிக்கையின் போது கடற்படை தளபதியாக இருந்த வசந்த கரன்னகொடமீது கொழும்பில் 11 தமிழ் மாணவர்கள் கடத்தல் உள்ளிட்ட மனித குலத்துக்கு விரோதமான செயல்கள், போர் குற்றங்கள் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டார். கடந்த வாரம், அவர் குடும்பத்துடன் அமெரிக்கா செல்ல வீஸா கோரினார். அவரின் வீஸா விண்ணப்பத்தை நிராகரித்த அமெரிக்க வெளிவிவகார இராஜாங்க செயலகம், அந்த நாட்டுக்குள் கரன்னகொடவும் அவரின் குடும்பத்தினரும் நுழையவும் தடை விதித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழர்...

போகின்றேன் என கூறுவது முற்றிலும் பிழையான விட யம். காரணம் என்னவென்றால் 7 மாகா ணங்களில் பெரும்பான்மையாக இருக் கும் சிங்கள மக்கள் 2 மாகாணங்களில் பெரும்பான்மையாக இருக்கும் தமிழ் பேசும் மக்களை அடிமைகளாக எண்ணுகிறார்கள் - என்றார்.

மேலும், தெற்கிலே ஓர் இந்து ஆலயத்தை தொல்பொருள் திணைக்களத்தினர் கண்டால் அதை கோவிலாக வடிவமைப்பார்களா? என்று கேள்வி எழுப்பிய அவர்,

அப்படி இருக்க வடகிழக்கில் வந்து விகாரைகளை அமைப்பதற்கான காரணம் என்ன? தமிழர் பகுதிகளில் சிங்கள ஆதிக்கத்தை நிலை நிறுத்தவே இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. வெறுமனே சிங்களவர்கள் என்ற காரணத்திற்காக மாத்திரம் தமிழர் பகுதிகளில் உள்ள பௌத்த அடையாளங்களை உரிமைக் கோருவது முறையற்றது என்றும் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் பிரச்னைகள் ஏற்படும் போது அதை தடுப்பதற்கு பல்வேறு சட்டங்கள் காணப்படுகின்றன. இவர்கள் பயங்கரவாத தடை சட்டத்தை கொண்டு வந்ததன் நோக்கம் அவரின் எதிரிகளை அடைத்து வைத்து அவர்களை அடக்குவதற்காகவே - என்றும் சாடினார். (ஐ)

# தேசிய ஆணைக்குழுவுக்கு அவுஸ்திரேலியா நிதியுதவி!

கொழும்பு, மே 03

அவுஸ்திரேலிய தேசிய செயல்திறன் ஆணைக்குழு மற்றும் இலங்கை தேசிய செயற்திறன் ஆணைக்குழு ஆகியவற்றின் செயல்பாட்டாளர்களுக்கு இடையிலான அனுபவங்களை பகிர்ந்துகொள்வதற்கான இணையவழி அமர்வு ஒன்று அண்மையில் இடம்பெற்றது.

ஜனாதிபதி அலுவலகத்தால் இந்த கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்காக இலங்கை பரந்த அளவிலான திட்டமிடல்களை அமுல்படுத்தியிருக்கின்ற நிலையில் அதன் முதன்மைத் திட்டமாக தேசிய செயல்திறன் ஆணைக்குழு நிறுவப்பட வேண்டுமென அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே நாட்டின் நெருக்கடியை பொருட்படுத்தாமல் 2023 வரவு செலவு திட்டத்தில் ஆணைக்குழுவை நிறுவுவதற்காக அரசாங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பல்வேறுபட்ட அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் அமைப்புக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாக அமைச்சுகள் உள்ளடங்கிய செயல்பாட்டு குழு ஒன்றால் ஊடாக இதன் செயல்பாடுகள் வழிநடத்தப்படும்.

செயல்திறன் செயல்பாடுகள் தொடர்பிலான சர்வதேச முறைமைகளை ஆராய்ந்து பார்ப்பதே ஆணைக்குழுவின் நோக்கமாவதோடு, அதற்காக சர்வதேச மட்டத்தில் அங்கீகாரம் பெற்ற அவுஸ்திரேலிய செயல்திறன் ஆணைக்குழுவின் உதவியை அரசாங்கம் கோரியுள்ளது. அதற்கான உதவிகளை இலங்கைக்கு வழங்குவதாக இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயம் உறுதியளித்திருந்தது.

இந்த ஆரம்பமானது இலங்கையின் பொருளார மீள் எழுச்சிக்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் உதவ முன்வந்துள்ளதை காண்பிக்கும் அதேநேரம், அதனால் இலங்கை மற்றும் அவுஸ்திரேலியாவுக்கு இடையிலான இரு தரப்பு உறவுகள் வலுப்பெறும் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

# கருத்து முரண்பாடுகளால் ஐக்கிய மக்கள் சக்தி உடையாது!

### திஸ்ஸ அத்தநாயக்க சொல்கிறார்

கொழும்பு, மே 03

ஐக்கிய மக்கள் சக்திக்குள் காணப்படும் கருத்து முரண்பாடுகள் கட்சியின் பிளவுக்கு ஒரு போதும் வழிவகுக்காது. அவை கலந்துரையாடல்கள் மூலம் தீர்க்கப்படக் கூடிய பிரச்சினைகளாகும் என்று பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

பதுளையில் இடம்பெற்ற மே தினக் கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் , எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தொடர்பில் சர்ச்சைக்குரிய கருத்துக்களை தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இது குறித்து நேற்று செவ்வாய்கிழமை கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

## ஏ. எல். விடைத்...

*கள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர குறிப்பிட்டார்.*

*மேலைத்தேய சங்கீதம், சித்திரம் உள்ளிட்ட சில பாடங்களுக்கான மதிப்பீட்டுப் பணிகள் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது. அத்துடன், உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் விரைவாக இணைந்துகொள்ளுமாறு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனத்திடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ)*

## தமிழர் தரப்...

வொன்று முன்வைக்கப்பட்ட பிறகுதான் மத்திய அரசாங்கத்திலே தமிழ்க் கட்சிகளின் பங்களிப்பு இருக்கும் - என்றும் அவர் கூறினார்.

மே தினமான நேற்று முன்தினம் ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டத்தில் மெய்நிகர் வழியே உரையாற்றிய ஜனாதிபதி, இந்த ஆண்டுக்குள் இனப் பிரச்னைக்கு தீர்வு வழங்கப்படும் என்றும் தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதில் தமிழ் அரசியல் கட்சிகளே பின்னடிக்கின்றன எனவும் கூறினார்.

இதற்குப் பதிலளிக்கும் விதமாக நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தமிழரசு கட்சியின் சுமந்திரன் எம். பி. மேற்கண்டவாறு கூறினார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியோடு தமிழ் கட்சிகள் சேர்ந்து நிற்க வேண்டும் என அவர் விரும்புவது இனப்பிரச்னைக்கு தீர்வளிக்கும் என்று கூறினால் அது நகைப்புக்கு உரிய விடயமாகும்.

தமிழ் மக்களுடைய நிலைப்பாடு நன்றாகவே ஜனாதிபதிக்குத் தெரியும். இனப்பிரச்னையை தீர்த்து வைப்பதற்கான எல்லா வழிமுறைகளும் உண்டு. - என்றார். (ஐ)

## குழந்தை...

*யாத நிலையில் குழந்தையின் உடல்கூற்று மாதிரி கள்கொழும்பு ஆய்வு கூடத்துக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.*

*மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபால சிங்கம் நடத்தினார். (ஐ)*

## தமிழரசு...

*ளுமன்ற உறுப்பினர்களான சி. சிறீதரன், எம். ஏ. சுமந்திரன், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் ஆகியோரை தலைமைப் பதவியை குறிவைத்து காய்களை நகர்த்துகின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார்.*

*அத்துடன், தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்கு வரலாற்றில் என்றுமில்லாதவாறு போட்டி நிலவுகின்றது. கடந்த பாராளுமன்றத் தேர்தலிலேயே சிறீதரன் தலைமை பதவியை குறிவைத்து காய் நகர்த்தியே சுமந்திரனுக்கு ஆதரவளித்து அவரை வெல்லச் செய்தார் என்றும் இதன்போது சாடியிருந்தார். (ஐ)*

## தையிட்டி...

வீதி முகப்பில் நடைபெறவுள்ளது.

வலி. வடக்கில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தையிட்டி கிராமத்தில் ஒரு பகுதியில் பொதுமக்களின் காணிகளை ஆக்கிரமித்த விகாரை அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் - விகாரைக்கு அருகிலுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு கோரியுமே மக்கள் இந்தப் போராட்டத்தை நடத்தவுள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் பங்கேற்று அனைவரையும் ஆதரவு தருமாறு வலி. வடக்கு மீள்குடியேற்றக் குழு அழைப்பு விடுத்துள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu



## இலங்கையில் புதிய வகை காளான்!

கொழும்பு, மே. 03

இலங்கையில் புதிய வகை காளான் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் மே பா லுவன்ஸ் பல்கலைக்கழகத்திலும் சீன ஆய்வு நிறுவனத்திலும் ஆய்வாளராகச் செயற்பட்ட கலாநிதி அசெனி எதிரிவீர உள்ளிட்ட ஆய்வாளர் குழாம் மேற்கொண்ட பரிசோதனையில் புதிய காளான் வகை கண்டறியப்பட்டுள்ளது. (அ)

## ரூபாவின் பெறுமதி உயர்வு

கொழும்பு, மே. 03

கடந்த வாரத்துடன் (ஏப்ரல் 28) ஒப்பிடுகையில் நேற்று அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி சற்று அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்தது.

அதன்படி, அமெரிக்க டொலரின் கொள்முதல் விலை 313.92 ரூபாவிலிருந்து 313.73 ரூபாவாக குறைந்துள்ளது.

அவ்வாறே, விற்பனை பெறுமதியும் 328.75 ரூபாவிலிருந்து 328.41 ரூபாவரை குறைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதேவேளை, யூரோ, சிங்கப்பூர் டொலர் மற்றும் சுவிஸ் பிராங்கிற்கு எதிராகவும் இலங்கை ரூபாவின் பெறுமதி சற்று உயர்ந்துள்ளது. (அ)

## கால்வாயில் விழுந்து ஒருவர் உயிரிழப்பு!

### கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, மே. 03

கிளிநொச்சி இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வட்டக்கச்சி சந்தையடி பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கால்வாயில் தவறி விழுந்து ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மாயவனூர் சந்தையடியைச் சேர்ந்த பாலசிங்கம் கிருஸ்னேஸ்வரன் தவம் (வயது-64) எனும் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

கடந்த திங்கட்கிழமை பெய்த கடும் மழையின் போது அவர் வீட்டின் அருகில் இருந்த கால்வாயில் தவறி விழுந்தே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக இராமநாதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## லிட்ரோ எரிவாயு விலை குறைப்பு

கொழும்பு, மே. 03

நேற்று நள்ளிரவு முதல் 12.5 கிலோகிராம் லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலனின் விலை குறைக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார்.

அதன்படி, குறித்த எரிவாயுவின் விலை குறைந்தது 100 ரூபாவினால் குறைக்கப்படும் என அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, கடந்த ஏப்ரல் 5 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் 12.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை 1005 ரூபாவால் குறைக்கப்பட்டது.

இந்தநிலையில் குறித்த எரிவாயு கொள்கலன் தற்போது 3,738 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. நேற்று நள்ளிரவு முதல் இந்த விலையில், மாற்றம் ஏற்படும் என்று லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது. (அ)

# உங்கள் பேச்சின்படி நடந்து காட்டுங்கள்!

### ரணிலிடம் மனோ வலியுறுத்து

கொழும்பு, மே. 03

"இந்த வருட இறுதிக்குள் இனப்பிரச்னை தீர்வு,பொருளா தார வளர்ச்சிக்கு தேசிய இன ஐக் கியம் அவசியம்" என்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். ஆனால், இக்கதையை நீங்கள் கடந்த சுதந்திர தினத்துக்கு முன்னிருந்து சொல்லி வருகின்றீர்கள். பெப்ரவரி 4இற்குள் தீர்வு காண்போம் என்றும் கூறினீர்கள். இப்போதும் மீண் டும், மீண்டும் கூறுகின்றீர்கள். இலங்கையில் வாழும் ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்கள் தொடர்பான இனப் பிரச்னை தொடர்பில், உங்களுடன் முழுமையாக ஒத்துழைக்க நாம்தயார். ஆனால், இனி நீங்கள் பேச்சை நிறுத்தி, செயலில் காட்டுங்கள்."

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வின் மே தின உரை தொடர்பில் மனோ எம்.பி. மேலும் தெரிவித்த தாவது: -

இலங்கையில் இன்று இருக்கும் பெரும்பான்மை கட்சிகளின் தலைவர்கள் மத்தியில், தேசிய இனப் பிரச்னை தொடர்பில் காத்திரமான முயற்சிகளை எடுத்தவர் ரணில் விக்கிரமசிங்க. அதில் சந்தேகம் இல்லை. ஏனையோரைப் பற்றி சந்தேகங்கள் இருக்கின்றன.

எனினும், ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நியமனம் பெற்ற பின் பலமுறை இந்தக் கால அட்டவணைக்குள் இனப்பிரச்னை தீர்வு என பல முறை கூறிவிட்டார். தமிழ் மக்களுக்கும் இந்த வசனம் பரிச்சயமானதாகும். சர்வகட்சி மாநாட்டை நடத்தி முதற்கட்டமாக 13 ஐ பற்றி பேசிய போது அதுவரை ஒளிந்திருந்த ஆமது ருக்கள் தெருவுக்கு வந்தார்கள். அத்துடன் அது நின்று போய் விட்டது.

இன்று அறகலய போராட்டத்துக்குப் பிறகு, கடுமையான பொருளாதார வீழ்ச்சிக்கு பிறகு, சர்வதேச சமூகத்திடம் கையேந்தும் நிலைமை ஏற்பட்ட பிறகு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இனப்பிரச்னை தீர்வு பற்றி, தமிழ்க் கட்சிகளை அழைத்து பேச முன் சிங்களக் கட்சிகளை அழைத்து நாட்டின் உண்மை நிலை பற்றிப் பேச வேண்டும். சிங்கள மக்களை விளித்து நேரடியாகக்கூற வேண்டும். இனிமேலும் இதைத் தள்ளிப் போட முடியாது என எடுத்துக் கூறவேண்டும். சர்வதேச சமூகமும் அதற்குச் சாதகமாக நடந்துகொள்ளும்.

தற்போது நிலைமையைப் பாருங்கள். "இந்த வருட இறுதிக்குள் இனப் பிரச்னை தீர்வு", "பொருளாதார வளர்ச்சிக்கு தேசிய இன ஐக்கியம் அவசியம்" என்றெல்லாம் கூறுவதற்கு முன், வடக்கு, கிழக்கில் காணி பறிபோகின்றது. தொல்பொருள் திணைக்களம், தொல்லை திணைக்களம் ஆகி விட்டது. சிவனைத் தூக்கிக் கடாசி விட்டு, பிக்குகள், இராணுவத் துணையுடன், புத்தனை பிரதிஷ்டை செய்கின்றார்கள். காவி உடையில் அரசியல் செய்யும் பிக்குகளை கட்டுக்குள் கொண்டு வர வேண்டும். அதற்கு இதுதான் வேளை. இல்லாவிட்டால் கடும் பதற்ற நிலைமை வடக்கு - கிழக்கில் விரைவில் உருவாகும்" - என்றார். (அ)

## "கொழும்பு அல்லாத நகரங்களின் போக்குவரத்து மேம்படுத்தப்படும்"

கொழும்பு, மே. 03

கொழும்புக்கு வெளியே உள்ள நகரங்களின் போக்குவரத்து வசதியை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அநுராதபுரம பொதுப் போக்குவரத்துத் துறைக்கென புதிதாக 27 பேருந்துகள் சேர்க்கப்பட்டன. இவற்றின் பெறுமதி 30 கோடி ரூபாயைத் தாண்டுவதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன சுட்டிக்காட்டினார்.

மக்களுக்கு உயர்தரத்திலான போக்குவரத்து வசதியை வழங்கும் நோக்கோடு இந்த வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் கூறினார். (அ)

## ஒருவர் அடித்துக் கொலை; தந்தையும் மகனும் கைது!

கொழும்பு, மே 03

மாத்தளை - கலேவெல நகரில் நபர் ஒருவரை அடித்துக் கொன்ற குற்றச்சாட்டில் தந்தை, மகன் உட்பட மூவரை கலேவெல பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த ஏப்ரல் 25ஆம் திகதி கலேவெல நகரில் இந்த தாக்குதல் இடம்பெற்றதாகவும், காயமடைந்த நபர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் அதே மாதம் 29ஆம் திகதி உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கொல்லப்பட்ட நபருக்கு எதிராக மாத்தளை நீதிமன்றத்தில் கொலை வழக்கு நிலுவையில் உள்ளதுடன், தாக்குதலில் தொடர்புடைய நபர் ஒருவரே வழக்கில் முக்கிய சாட்சியாளர் என்றும் தெரியவந்துள்ளது. (ஐ)

## வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி மோசடி; வவுனியா இளைஞர் கடத்தப்பட்டு சித்திரவதை

### யாழ்ப்பாணத்தில் 11 பேர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், மே. 03

வெளிநாடு அனுப்புவதாக கூறி, 10 இலட்சம் ரூபா பணம் வாங்கிய வவுனியாவைச் சேர்ந்த இளைஞனை யாழ்ப்பாணத்துக்குக் கடத்தி வந்து, வீட்டுக்குள் அடைத்து வைத்துத் தாக்கி, கடிதம் எழுத வைத்து- ஆதாரம் உருவாக்கிய 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொக்குவில், தாவடி பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் அடைத்து வைக்கப்பட்டிந்த இளைஞன் மீட்கப்பட்டுள்ளார்.

வவுனியா, பூவரசம் குளம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், வெளிநாடு அனுப்புவதாகக் கூறி ஊர்காவற்துறை, வேலணையை சேர்ந்தவர்களிடம் ரூபாய் 10 இலட்சத்தை வாங்கியுள்ளார். அந்தப் பணம் கொடுக்கப்பட்டதற்கு எந்த ஆதாரமும் இல்லை. முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பகுதியில் ஏப்ரல் 25 ஆம் திகதி இந்த பணப்பரிமாற்றம் நடந்தது.

தமது பணம் மோசடி செய்யப்பட்டால் என்ன செய்வதென யோசித்த பணம் வழங்கிய தரப்பினர், பணம் வாங்கிய இளைஞரை கடத்தி வந்து, ஆதாரம் உருவாக்கத் திட்டமிட்டு, இந்த கடத்தலில் ஈடுபட்டுள்ளனர்.

வவுனியா, பூவசரசன்குளத்தைச் சேர்ந்த 34 வயதான முச்சக்கர வண்டிச் சாரதியே இவ்வாறு கடத்தப்பட்டார். இவரை மன்னாரைச் சேர்ந்த இரண்டு இளம் பெண்களே கடத்தினர். 29 வயதான பெண்ணொருவர் திருமணம் செய்து தற்போது பூவரசங்குளத்தில் வசிக்கிறார். அவரும் 20 வயதான மற்றொரு யுவதியும், குறிப்பிட்ட முச்சக்கர வண்டி சாரதியை வாடகைப் பயணத்துக்காக அழைத்துள் ளனர்.

அவர்களை ஏற்றிக்கொண்டு, பூவரசங்குளத்திலுள்ள கணவர் வீட்டுக்கு வந்துள்ளனர். அங்கு ஏற்கனவே திட்டமிட்டபடி காத்திருந்த குழுவினர், முச்சக்கர வண்டிச் சாரதியை, வீட்டுக்குள் இழுத்துச் சென்று தாக்கியுள்ளனர்.

பின்னர், பூவசரங்குளத்தில் உள்ளவரின் சகோதரரின்- தாவடி எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அண்மையில் அமைந்துள்ள வீட்டுக்கு அழைத்து வந்துள்ளனர்.

ஹைஏஸ் வாகனத்திலும், மோட்டார் சைக்கிள்களிலும் 10 பேர் கொண்ட குழுவினர் அவரைத் தாவடியிலுள்ள வீட்டுக்கு அழைத்து வந்து, அறைக்குள் அடைத்து வைத்துத் தாக்கியுள்ளனர்.

தம்மிடம் பணம் வாங்கியதற்கான ஆதாரக் கடிதத்தை தருமாறு கேட்டுத் தாக்கியுள்ளனர். கடுமையாக தாக்கப்பட்டார். இதையடுத்து அவர் கடிதத்தை எழுதிக் கையெழுத்திட்டு வழங்கியுள்ளார்.

இதற்குள், இதுபற்றி தகவல் அறிந்த புலனாய்வு பொலிஸார், அந்த வீட்டை முற்றுகையிட்டு காயப்பட்டவரை மீட்டதுடன், 11 தாக்குதல் நடத்திய 10 பேரையும், வீட்டின் உரிமையாளரையும் கைது செய்தனர். கைதானவர்களில் மூன்று பெண்களும் அடங்குவர். (அ-03)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.05.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.